# அமிர்தவசனி


தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 7<br>இதழ் 1<br>விலை அ. 4 | மன்மத ஹு சித்திரை மீ<br>ஏப்ரல்—மே—1955 | வருட<br>சந்தா<br>ரூ. 2-4-0 |




மணமகளார் கூந்தலை மாவிரதர் கேட்க,
மகிழ்ந்தளித்து மங்கலங்கொள் மானக்கஞ்சாறர்.

(சித்திர விளக்கம் 13, பக்கம் 42)



# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஏழாம் வருஷம் | (திருப்புகழ் மணி) ... | 1 |
| 2. | முருகன் | (திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்) ... | 2 |
| 3. | பாடல்பெற்ற சில தலங்கள் | (ரா. பி. சேதுப்பிள்ளை) ... | 4 |
| 4. | நடமாடும் நம்பன் | (சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ... | 12 |
| 5. | பக்தியின் சக்தி | (ஆ. கி. ரங்கராஜன்) ... | 18 |
| 6. | எக்காலக் கண்ணியார் | (ரசபதி) ... | 22 |
| 7. | தெய்வீக சமுதாயம் | (அ. ராமமூர்த்தி) ... | 30 |
| 8. | ஸ்ரீ ஜய தேவர் | (ரா.) ... | 33 |
| 9. | மங்களா சாஸநம் | (அன்பன்) ... | 35 |
| 10. | மானக்கஞ்சாற நாயனுர் | (கி. வா. ஜ.) ... | 42 |
| 11. | மதிப்புரை | ... | 45 |
| 12 | Radhakrishna | *(Thiruppugal Mani)* ... | 46 |


## மன்மத ஆண்டு வாழ்த்து

மன்மத ஆண்டில் மக்கட்குச் சிறந்த அமைதியும் இன்பமும் செழிக்கவும், அன்பும் அருளும் அமையவும், வளமும் வாழ்வும் வளரவும், பெருமான் திருவருளை அமிர்தவசனி பிரார்த்திக்கின்றது.

## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருட சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட ரூ. 2—4—0. நான்கு வருட சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 3—0—0. நான்கு வருட சந்தா ரூ. 11—0—0.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினுல், முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே

| | | |
|---|---|---|
| மலர் 7 | மன்மத ௵ சித்திரை மீ<br>ஏப்ரல்—மே - 1955 | இதழ் 1 |


## ஏழாம் வருஷம்

(திருப்புகழ் மணி)

சென்ற ஆறு வருஷங்களாக அமிர்தவசனி பக்தி வெள்ளத்தையும் தத்வ ஆராய்ச்சியையும் நாடெங்கும் பரவச்செய்து வருகின்றது. ஏழாவது வருஷத்திய முதல் மலராகும் இந்த மலர். பக்தர்கள் ஆசி கூறி இந்த முயற்சியை வாழ்த்துவார்களாக. குழந்தை பிறந்து வளர்ந்து வந்தால், நாடெல்லாம் களிக்கின்றார்கள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருவதை பூஷிக்கின்றனர். முப்பது அல்லது நாற்பது வயதேறி விட்டால் உடம்பின் வளர்ச்சி நின்று விடுகின்றது; தளர்ச்சி காணப்படுகின்றது. குழந்தைகள் வளர்ந்து வருங்கால், 6 வயது 10 வயது 20 வயது பெரிய புருஷனாய் வளர்ந்து வருகிறான் என்று சந்தோஷிக்கின்றார்கள். ஆனால் தளாச்சி கண்டவுடன் வயது ஆய் விட்டதே என்று

---

சீர்பூண்டசெந் திருநோக்கமும் திருமால்மரு மகள்நோக்கமும்
பேர்பூண்டசங் கரிநோக்கமும் பிரியாமலே எனையாளுவாய்.

தளர்கின்றனர்கள். அமிர்தவசனி எனும் குழந்தைக்குத் தளர்ச்சி கிடையாது. எப்போதும் வளர்ச்சிதான். எத்தனை வருஷமானாலும், அத்தனை வருஷத்திய சேவை. அதில் அரும் பெரும் பக்தர்கள் அநுபவ மெலாம், தெளிந்த தமிழில் உணர்த்தப் படுகின்றது. செந்தமிழில் மதபேதமின்றி ஆழ்வார் நாயன்மார்கள் சித்தர்கள் உபதேசித்த மஹா வாக்கியங்களெல்லாம் பிரசுரப்படுத்தப் படுகின்றன. தமிழ் நேயர்கள் மிகவும் படித்துப் பயன் பெறத்தக்க பத்திரிகை.

நாம பஜனம் தீன தரணம்!
சங்கீத மென்பது சஜ்ஜன வசனம்!
ஒன்றும் உலகம் அன்புமயம்!
அநுபூதியுற்றார் ஐம்புலன் வென்றார்!
பக்தியின் வழிபாடே முக்தியெனும் சித்தி!

எப்பொழுதும் குமரப் பருவத்திலேயே நிலைத்து, நீடூழிகாலம் அமிர்தவசனி மானிட சேவை செய்து பக்தியையும் நல்லொழுக்கத்தையும் எங்கும் பரப்புமாறு முருகனை வேண்டுவோமாக.

---

# முருகன்

(திருமுருக, கிருபானந்தவாரி அவர்கள்)

என்றும் அகலாத இளமை எழில் நலத்துடன் விளங்கும் பரம்பொருள் முருகக் கடவுள். சிவமூர்த்தியி னுடைய பழைய வடிவு ஆறுமுக வடிவம் ஆகும். தனது தொல்லைத் திருமுகம் ஆறுமுகங் கொண்டான் எனும் இதனால், சிவம் வேறு முருகன் வேறு என்று கருதுங்கருத்துஉண்மையென்று உறுதியாகின்றது. சிவமூர்த்திக்கு அந்நியமாக முருகனை நினைத்த மதியினத்தினாலே சூரபன்மன் கெட்டனன்.

சிவபெருமான் தட்சிணு மூர்த்தமாகவும் நடராஜ மூர்த்தியாகவும் காட்சி தருவதுபோல், சிறப்பாக அருள்புரியும் பொருட்டு முருக மூர்த்தமாகக் காட்சி தருகிருர். ஐம்முகச் சிவமும் அறுமுகச் சிவமும் ஒன்றே என உணர்க.

கலியுக வரதராய்க் கண்கண்ட தெய்வமாய் அடியவர்க்கெளியராய் விளங்கும் குமார மூர்த்தியை, மன மொழி மெய்களால் வழிபடுவோர் இக பர நலன்களை எளிதிற் பெறுவர்.

விண்ணளவாய்க் குவிந்த விறகை வெந்தழற் பொறி எரித்துச் சாம்பராக்குவதுபோல், பல பிறப்புக்களில் புரிந்து குவிந்துள்ள மலைபோன்ற வல்வினைகளை முருக வேளுடைய ஆறு முகங்களில் ஒரு முகம் அழித்து அருள் புரியும்.

"கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே"

"உருகும் அடியார் இருவினைத் தொகையறுக்குமவன்"

மணத்தை நாசியினுலும், ஓசையைச் செவியினுலும், உருவத்தைக் கண்ணுலும், சுவையை நாவினுலும், காற்றை உடம்பாலும் அறிவதுபோல் முருகப் பெருமானைத் திருவருள் ஒன்ருலேயே அறியமுடியும். "அவனருளாலே அவன் ருள் வணங்கி" என்ற தமிழ் மறையால் இதை உணர்க.

ஆகவே, குமரக் கடவுள் திருவருளை அன்பினுலேயே யடைய முடியும். அன்பால் அருள் வரும். "அருள் என்னும் அன்பீன் குழவி" என்பது பொது மறை.

அன்பை விளைவிப்பது ஆன்ருேருடைய அமுதப் பாடல்கள். தேவாரம் திருவாசகம் திருமுருகாற்றுப்படை திருப்புகழ் கந்தரநுபூதி முதலிய பாடல்களை நாம் படிக்கும் போதும் கேட்கும் போதும் அன்பு மேலிடுகின்றது. அந்த அன்பால் அருளையும், அருளால் இறைவனையும் அடையலாம். அப் பாடல்களையும் திருக்கார்த்திகை கந்த சஷ்டி முதலிய நாள்களில் விரதம் இருந்து பாராயணம் புரியும் பக்தர்கட்குப் பன்மடங்கு பயன் உண்டாகும்.

---


துதியாமலும் பணியாமலும் துகள்தீருநின் பதபங்கயம்
மதியாமலும் திரிகின்றஎன் மனமென்றுநின் வசமாகுமோ.

# பாடல்பெற்ற சிவ தலங்கள்

ரா. பி. சேதுப்பிள்ளை

'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று பாடினார் மாணிக்கவாசகர். பாரதநாட்டின் தென்பாலுள்ள தமிழ் நாட்டில் சிவ வழிபாடு சாலப் பழமை வாய்ந்தது. பார்க்கு மிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைந்துள்ள பரமசிவனார்க் குப் பல்லாயிரம் கோயில்கள் தமிழ்நாட்டில் உண்டு. அவற்றுள் தேவாரப் பாமாலை பெற்ற திருக்கோயில்களைப் 'பாடல் பெற்ற தலங்கள்' என்று போற்றுவர் சைவ நன்மக்கள்.

இத்தகைய பெருமை சான்ற சிவாலயங்களுள் தலை சிறந்தது சிதம்பரம். ஆதியில் அவ்வூர் தில்லை மரங்கள் நிறைந்த காடாகஇருந்தது. அதனால் தில்லை என்னும் பெயர் அதற்கு அமைந்தது. சைவ உலகத்தில் எல்லையற்ற பெருமை வாய்ந்தது தில்லை. அங்குள்ள திருக்கோயிலை அம்பலம் என்றும், திருச் சிற்றம் பலம் என்றும் தேவாரம் பாடிற்று. திருச் சிற்றம்பலம் என்பது சிவ னடியார்க்கு ஒரு சிறந்த மந்திரம். தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளைத் தொடங்கும் பொழுதும் முடிக்கும்பொழு தும் திருச்சிற்றம்பலம் என்ற மறை மொழியை மனமார நினைத்து நாவார நவிலும் முறை இன்றும் தென்னாட்டிலே உண்டு. திருச்சிற்றம்பலம் என்பது தில்லையம்பலமே.



சிதம்பரம்

---

ஞானக்கலை யுணர்வாருடன் நண்ணுமல்உண் டுடையும் புணைந்(து)
ஊனச்சுமந் துழல்கின்றநான் உனைநண்ணிடும் வகைகண்டிலேன்

அம்பலவாணன் ஆகிய ஈசன் சேவடியைப் போற்றும் செல்வமே செல்வம் என்று பாடினர் திருஞான சம்பந்தர்.

"செல்வ நெடுமாடம் சென்று சேண் ஓங்கிச்
செல்வம் மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே"

என்பது அவர் திருவாக்கு.

தில்லைச் சிற்றம்பலத்தை மன்னரும் முனிவரும் தொழுது தொல்லையிரும் பிறவியைத் தொலைத்தனர்; திருச்சிற்றம்பலத்தைப் பொன்னால் வேய்ந்து பொன்னம்பலம் ஆக்கினர் தமிழ் மன்னர். அவ்வம்பலத்தில் ஆனந்த நடம் புரியும் அழகிய கூத்தனைக் கண்களிப்பக் கண்டு இன்ப வாரியில் மூழ்கினர் அடியார்கள். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் புரியும் அழகிய கூத்தனைக் கண்ணாரக்கண்டு வழிபடும்பேறு கிடைக்குமாயின் மனிதப் பிறவியும் வேண்டுவதே என்று பாடினர் திருநாவுக்கரசர்.

"குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே".

இவ்வாறு திருநாவுக்கரசரின் உள்ளங் கவர்ந்த பொற்பாதத்தைப் போற்றிப் பிறவிப் பயனடைந்த அடியார் என்

---

முட்டற்குறும் பயனென்கொலோ முருகாஅரி மருகாகுகா
வேடச்சிமால் கொளுமையனே வேலாயுதா வேலாயுதா.

ணிறந்தவர். அத்திருவடியின் பெருமையை ஊன் கரைந்து உயிர் கரைந்து பாடினர் வடலூர் அடிகள்.

ஆடிய பாதம், மன்றுடிய பாதம்
பாடிய வேதங்கள் தேடிய பாதம்
தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம்
தெய்வங்கள் எல்லாம் தெரிசிக்கும் பாதம்'

என்று நடராஜப்பெருமானது பொற்பாதத்தைப் போற்றினர் வடலூர்ப் பெரியார்.

சைவ சமயத்தின் புண்ணியக் கண்ணெனத் திகழ்வது தில்லை அம்பலம். திருத் தொண்டர் புராணம் இயற்றப் போந்த சேக்கிழார் பெருமானுக்கு 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்த மன்றம் தில்லைச் சிற்றம்பலமே! 'தில்லை பாதி திருவாசகத்திலே' என்று உலகம் சொல்லும் வண்ணம் திருவாசகத்தில் ஒரு பாதி வாசகம் பெற்றது தில்லைச் சிற்றம்பலமே! கட்டை இருக்கையில் சிதம்பரம் போய்க் காண வேணும் ஐயே! என்று திருநாளைப் போவாரைக் கதற வைத்தது தில்லைச் சிற்றம்பலமே! இத் தகைய சீர்மை வாய்ந்த தில்லையின் எல்லையில் இன்று அருந்தமிழ்க் கலை வளர்க்கும் அண்ணுமலைப் பல்கலைக் கழகம் நின்று நிலவுவதும் கண்ணுதற்பெருங் கடவுளின் கருணைக்கு ஓர் அடையாளமன்றே?

இனி, பாண்டிநாட்டின் பழம்பதியாகிய மதுரையைச் சிறிது பார்ப்போம்.

சிவநெறியையும் செந்தமிழையும் செம்மையாகப் பேணிவளர்த்த பெருமை மதுரைமா நகருக்கே உரியதாகும். அந்நகரை ஊற்றுப் பெருக்கால் ஊட்டி வளர்க்கும்

---

பொல்லாதவினை பழிகொள்வதில் பொறையாமுடல் விடல்நல்லதே
வெல்லாத சூரனை வென்றிடும் வேலாயுதா வேலாயுதா.

வைகையாற்றையும், அங்ககரிலே வீசுகின்ற மெல்லிய பூங் காற்றையும் தமிழ் மயமாகவே கண்டனர் தமிழ்க் கவிஞர். ''புலவர் நாவிற் பொருந்திய பூங் கொடி, வையை என்ற பொய்யாக் குலக்கொடி'' என்று வைகையாற் றைச் சிலப்பதிகாரம் பாடிற்று. மதுரையம்பதியில் பாண்டிய மன் னர்கள் கண்ணும் கருத்துமாக வளர்த்த தமிழ்ச் சங்கத்தில் ஈசனே தலைமைப் புலவனாக அமர்ந்திருந் தான் என்று புராணங்கள் கூறும். 'கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழ்' என்று பாடினர் பரஞ்சோதி முனிவர். நான் மாடக் கூடல் என்று தமிழிலக்கியத்தில் குறிக்கப்படு கின்ற மதுரைமா நகரில் அமைந்த கோயில் 'ஆலவாய்' என்னும் பெயர் பெற்றது. ஆலவாயின் பெருமையைத் தேவாரத்திலே காண்பது ஓர் ஆனந்தம்.



ம து ரை

" மங்கையர்க் கரசி, வளவர்கோன் பாவை
வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்வி, பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழல் உருவன், பூதநாயகன், நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே!"

பொய்யாமுடல் மெய்யாமெனப் பொருள்தேடிஉன் அருள்தேடிலர்
ஐயோகொடு வினையேமுனுள் அயனுர்விதித் ததுவோ சொலாய்.

இத் திருப்பாசுரத்தில் அங்கயற்கண்ணியோடு அமர்ந்தருளும் செம்பொருளாகிய ஈசன் பெருமையைப் பேசுகின்றார் திருஞான சம்பந்தர். பாண்டிய நாடும் பாண்டிய மன்னனும் சமண சமயத்தைப் பற்றி நின்ற போது, ஆலவாய்ப் பெருமானிடம் அசையாத அன்பு பூண்டு சிவநெறியை ஆதரித்த பாண்டிமா தேவியை மங்கையர்க்கரசி என்றும் பங்கயச் செல்வி என்றும் பாராட்டினார் திருஞான சம்பந்தர். மங்கையர்க்கரசியின் கருத்தறிந்து சமணர்களோடு கனல் வாதமும் புனல் வாதமும் நிகழ்த்தினார். அவரை வென்றார். சைவ சமயத்தைப் பாண்டி நாட்டில் நிலைநாட்டினார். கருணையங் கடலாய இறைவன் திருவிளையாடலைக் கண்ட மதுரைமா நகரம் அன்று முதல் சிவ மணம் கமழும் திருநகராகத் திகழ்கின்றது.

பாண்டி நாட்டின் தலைநகராக மதுரைமா நகரம் சிறந்து விளங்கிய வண்ணமே தொண்டை நாட்டின் தலை நகராகத் திகழ்ந்தது காஞ்சிமா நகரம்.



காஞ்சிமா நகரம்

காஞ்சியின் பெருமை தமிழ் நாட்டில் மட்டுமேயன்றிப் பாரத நாடு முழுவதும் முன்னாளில் பரவியிருந்தது. 'நகரங்களிற் சிறந்தது காஞ்சி' என்னும் பொருளுடைய வாசகம் ஒன்று வட மொழியில் உண்டு.

'கல்வியே கரையிலாத காஞ்சிமா நகரம்' என்று தேவாரம் அந் நகரத்தைப் புகழ்ந்து பாடிற்று. காஞ்சிமா நகரிலுள்ள சிவாலயங்க

---

தண்டுன்றிமெல் உடல்கூனியே தள்ளாடி யிளையுநீடியே
மண்டுன்தளர்ந்(து) உரைதப்பியே மாயாமுனே நீயாளுவாய்.

ளுள் தலைமை சான்றது 'கச்சி ஏகம்பம்' என்னும் திருக் கோயிலாகும். ஏகம்பம் என்பது ஏகாம்பரம் என்னும் சொல்லின் சிதைவு என்பர். ஓர் மாமரத்தின் கீழ் ஈசன் கோயில் கொண்டமையால் ஏகாம்பரம் என்னும் பெயர் அதற்கு அமைவதாயிற்று. ஏகாம்பரத்தில் உள்ள இறை வன் ஏகம்பன் என்று பெயர் பெற்றான். கச்சி ஏகம்பனை ஆன்றோர் பலர் பாமாலை அணிந்து போற்றியுள்ளார். தேவாரம் பாடிய சுந்தரர் கச்சியிலுள்ள ஏகம்பனைக் கம்பன் என்றே பாடித் தொழுதார்.

" ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை, அமரர் தொழுது ஏத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானை
சிந்திப்பார் அவர் சிந்தையுளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே."

இத்திருப்பதிகத்தில் சுந்தரர் மேலும் பாடும்பொழுது நல்ல கம்பன் என்றும், பெரிய கம்பன் என்றும், கச்சியேகம் பனைப் போற்றுகின்றார். கவியரசனாகிய கம்பன் பெயர் கச்சி ஏகம்பனுடைய பெயராக இருத்தல் கூடுமோ என் பது ஆராய்தற்குரியதாகும்.

இனி, ஈசன் கோயில் கொண்டுள்ள மலைகளுள் ஒன் றைப் பார்ப்போம். தென்னாட்டில் திரு அண்ணாமலை முத லிய மலைகள் பல இருப்பினும் கண்ணப்பன் வழிபட்ட

---

ஆறக்கரந் தனைஎண்ணிவி டடையும்திரு அடியார்க்கெலாம்
வேறக்கரத் தாலரவதென் வேலாயுதா வேலாயுதா.



காளத்தி

காளத்தி மலை ஒரு தனிச் சிறப்புடையதாகும். கண்ணப்ப நாயனார் பெருமை தேவாரத்திலும் திருவாசகத்திலும் பேசப்படுகின்றது. காளத்தி மலையைப் பாடிய திருஞானசம்பந்தர் கண்ணப்பனது ஒப்பற்ற பக்தியைப் புகழ்ந்து போற்றுகின்றார்.

"வேயனைய தோள் உமை யொர்
 பாகமது வாக விடையேறி, சடைமேல்
தூய மதி சூடி, சுடுகாடில் நடமாடி,
 மலை தன்னை வினவில்
வாய் கலசமாக வழிபாடு செயும் வேடன்
 மலராகும் நயனம்
காய் கணையினால் இடந்து
 ஈசன் அடிகூடு காளத்தி மலையே."

காளத்தி நாதனை வணங்கிப் பாமாலை சாத்திய திருஞான சம்பந்தர் கும்பிட்ட பயன் காண்பார் போல், அம் மலையில் சிலை வடிவாக நின்ற கண்ணப்பனையும் மனம் கசிந்து வழிபட்டார் என்று சேக்கிழார் மிக உருக்கமாகப் பாடுகின்றார்.

தமிழ்நாட்டின் தென்கோடியில் அமைந்தது இராமேச்சுரம். பாரதநாட்டு மக்களும் இலங்கை நாட்டு மக்களும் பரவி வழிபடும் பெருமை வாய்ந்தது இத்திருக்கோயில். ஈச்சுரம் என்பது ஈசனாகிய சிவன் உறையும் கோயிலாகும்.

---

ஆருறுதத் துவமாகியும் அயலாகியும் திகழ்சண்முகா
வேருரெனக்(கு) உனையன்றியே வேலாயுதா வேலாயுதா.

காவிரிப்பூம் பட்டினத்தில் பல்லவன் ஒருவன் கட்டிய ஈசன் கோயில் பல்லவனேச்சுரம் என்று பெயர் பெற்றது.

சோழநாட்டில் நாகர் தலைவன் ஒருவன் கட்டிய திருக்கோயில் திருநாகேச்சுரம் என்று பெயர் பெற்றது. இவ்வண்ணமே இலங்கையின் மேல் படையெடுத்து இராவணனை வென்று திரும்புங்கால் இராமன் ஈசனுக்குக் கோயில் அமைத்து வழிபாடு செய்த இடம் இராமேச்சுரம் என்று பெயர் பெற்றது என்பர்.



இராமேசுவரம்

" தேவியை வவ்விய தென் இலங்கைத்
தசமா முகன்
பூவியலும் முடி பொன்றுவித்த
பழிபோய் அற
ஏவியலும் சிலை அண்ணல் செய்த
இராமேச்சுரம்
மேவிய சிந்தையினார்கள் தம்
மேல் வினை வீடுமே"

(திருஞான சம்பந்தர்)

என்று தேவாரத்தில் இக்கருத்து உணர்த்தப்படுகின்றது.

---


# நடமாடும் நம்பன்

(சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A.,B.T.)

(முன் இதழ்த் தொடர்ச்சி.)

## திருமங்கை மன்னன் பாராட்டும் திருக்கூத்து:

திருப்புத்தூர்த் தலபுராணப்படி எழுவகைக் கூத்துக் களைப்பற்றி அறிந்தோம். மேற் போந்த கருத்துக்கள் பெரும்பாலும் சைவப் பெரு மக்கள் திருவாக்காகவே உள்ளன. வைணவ ஆழ்வாரில் குறிப்பிடத்தக்கவர் கொற்றவேல் பரகாலன் கலியன் என்னும் திருமங்கை மன்னராவர். அவர் அருளிய ஆறு திவ்யப்ரபந்தங்களுள் ஒன்றான பெரிய திருமடலில் சிவனார் திருக்கூத்தைப் பாராட்டும் சிறப்பைச் சிறிது நோக்குவாம்.



பெரிய திருமடல்:—பரகால நாயகி, திருமாலை அணையக் கொண்டதாகிய பகவத் காமம் அளவற்றிருந்ததாகத் தனது காமாதிசயத்தை 'மடலூர்வேன்' என்று கூறி, சீதை, வேகவதி, உலூபிகை, உஷா, பார்வதி என்பார்களை எடுத்துக் காட்டி, அவர்கள் தம் கணவனோடு கூடுதற்குப் பதறிய தன்மையைக் கூறித் தானும் அதனால் மடலூறப் போவதாக ஒரு பிரபந்தத்தைத் திருமங்கை மன்னர் இயற்றியுள்ளார்.

"பொன்னுலகில் வானவரும் பூமகளும் போற்றிசெயும்
நன்னுதலீர் நம்பி நறையூரர்—மன்னுலகில்
என்னிலைமை கண்டும் இரங்காரே யாமாகில்
மன்னு மடலூர்வன் வந்து" (பெரிய திருமடலின் தனியன்)

---

புரியும் கனகமும் வெற்றியும் புகழும் தருமமு மிகுவாய்
விரியும் கடம்பணி மார்பனே வேலாயுதா வேலாயுதா.

**திருமடல் கூறும் சிவன் கூத்து:—**

மலை மகளான உமாதேவியார் சடைமுடித்து ஊன் வாட்டவும், ஐம்புலன்கள் நொந்து அகலவும் அரியதவமு ஞற்றி, "ஆயிரந் தோள்கள் பொருந்திய கைகளைத் திசை களிலே வீசி நின்று, திசைகளெல்லாம் மின்னித் தீப்பொறி கக்க மேலே தூக்கிய கழலணிந்த திருப்பாதம் பொன்மய மான மேலுலகங்களை எல்லாம் கடந்து மேலே மேலே சிலும்பவும், நிலைத்த குலவரைகளும், காற்றும், விண்மீன் களும் தம்முடன் சுழன்றிடத் தான் சுழன்று கூத்தாடும் கொல்லற்குரிய மூவிலை வேல் ஏந்தும் கூத்தப் பிரானுகிய நீறு பூசிய நிமலன் தன் பொன்னூர் மார்பைப் புணர வில்லையா"

"மன்னு மலையரையன் பொற்பாவை வாணிலா
மின்னு மணிமுறுவல் செவ்வாய் உமை என்னும்
அன்ன நடைய அணங்கு நுடங்கிடைசேர்
பொன்னுடம்பு வாடப் புலனைந்தும் நொந்தகலத்
தன்னுடைய கூழைச் சடாபாரந்தான் தரித்தாங்கு
அன்ன அருந்தவத்தி னூடு போய் ஆயிரந் தோள்
மன்னுகர தலங்கள் மட்டித்து மாதிரங்கள்
மின்னி எரிவீச மேலெடுத்த சூழ்கழல் கால்
பொன்னுலகமேழும் கடந்து உம்பர் மேல் சிலும்ப
மன்னுகுல வரையும் மாருதமும் தாரகையும்
தன்னினுடனே சுழலச் சுழன்றுடும்
கொன்னவிலும் மூவிலை வேல் கூத்தன் பொடியாடி
அன்னவன்றன் பொன்னகலம் சென்றங்கணைந்திலளே"

**விளக்கம்:**

பரகாலர் ஈண்டுத் தெரிவிக்கும் திரு நடனம் சிவனர் ஆடும் ஊர்த்துவ தாண்டவமாகும். இதில் சிவனருக்கு ஆயிரம் தோள்களிற் பொருந்திய கரங்கள் எட்டுத்

---

குடியாக்கி மாதவரந்தணர் குறைநீக்கி ஆகமமோதிடா
மிடிபோக்கியாள் மயில்வாகனு வேலாயுதா வேலாயுதா.

திசைகளிலும் மண்டலாகாரமாக வியாபித்து நிற்பதாகவும் கூறப் படுகிறது. திசைகளில் தீப்பொறிகள் கிளம்பு கின்றன. ஒரு கால் வீரக் கழலணிந்தது. அதனைத் தூக்கி யாடும் போது, அது மேலேழ் உலகுகளை யெல்லாம் கடந்து அதற்கு மேலும் போய்ச் சிலும்புகிறது. சங்கரனார் ஆடும் போது குலவரைகளும், காற்றும், விண்மீன்களும் உடன் சுழல்கின்றன. இவ்வித நடம்புரியும் பெருமான், மூவிலை வேலேந்தி, நீருடிய நிமலனாய்க் கூறப்பட்டுள்ளான். இக் கூத்தினால் கூத்தரசின் சர்வ வியாபகம் நன்கு பெறப்படு கிறது. இதன் சிறப்பு மறந்தும் புறந்தொழா மரபின் வைணவ ஆழ்வாரையும் பிணித்ததாலேயே வெளியாகிறது.

பத்தாந் திருமுறை பகர்வது:—

அருள் மூலங் கண்ட திருமூலநாதர், பத்தாந் திரு முறையாகிய திருமந்திரத்துள் கூறுவதைக் காண்போம்.

"சிற்பரஞ் சோதி **சிதானந்தக் கூத்தனைச்**
சொற்பதமாம் அந்தச் **சுந்தரக்** கூத்தனைச்
**பொற்பதிக்** கூத்தனைப் **பொன்தில்லைக்** கூத்தனை
**அற்புதக்** கூத்தனை ஆரறிவாரே"

சிவானந்தக் கூத்து: இக்கூத்தின் தன்மையும் பயனும் இதன் பெயராலேயே விளங்கும். இக்கூத்து உயிர் கட்கு என்றும் மாறாத இன்பம் நல்குவது. என்றும் ஆடு வாரைப் போலவே அழிவின்றி நடப்பது. சதானந்த சத்தி யுடன் ஆடப்படுவது; ஞானங் கடந்து ஆடப்படுவது. இதற்கு ஆடுஞ் சபையும், பாடும் பாடலும், கூடும் முர சாதிப் பலவகை வாத்தியங்களும் ஆனந்தமேயாம். இவற் றுடன் நம்பி, அகில சராசரங்களில் நின்று ஆனந்தமாக ஆடு கின்றான். பூதாண்ட பேதாண்ட போக யோக அண்டங் களும், வேதங்கள், ஆகமங்கள், கீதங்கள், பூதங்கள், புவ

---

சங்கோலிடும் பழனங்களும் தனதன்படைத் திருச்செல்வமும்
இங்கோலமென் றுனைநம்பிவந் தேற்போர்க்கெலாம் எளிதீகுவாய்.

னங்களும் முழுதாட நாதங்கொண் டாடுகிருன் ஞானனந் தக் கூத்தே.

"ஆனந்த மாடரங்கு ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்தமாக அகில சராசரம்
ஆனந்த மானந்தக் கூத்து உகந்தானுக்கே".

இத்திருக் கூத்தினுல் ஐந்தொழில்கள் நடைபெறும்.

"பூதாண்ட பேதாண்ட போகாண்ட யோகாண்ட
மூதாண்ட முத்தாண்ட மோகாண்ட தேகாண்ட
தாகாண்ட மைங்கருமத் தாண்ட தற்பரத்து
ஏகாந்தமாம் பிரமாண்டத்த என்பவே."
"வேதங்களாட மிகு ஆகமமாடக்
கீதங்களாடக் கிளரண்ட மேழாட
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினன் ஞானனந்தக் கூத்தே."
"ஆனதொழி லருளாலைந் தொழிற் செய்தே
தேன்மொழி பாகன் திருநட மாடுமே."
"தாபதர் சத்தர் சமயம் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே."

## 2. சுந்தரக் கூத்து

சொற் பிரபஞ்சம், பொருட் பிரபஞ்ச மென்றவற்றின் முடிவாய், ஏழண்டமுங் கடந்து அப்பாலுக் கப்பாலாய் விளங்கும் சிவன், அருளினுல் உருவு கொண்டு அழகாக அருட் சத்தியான உமைகாண ஆடுவது.

"அண்டங்க ளேழினுக் கப்புறத்தி அப்பால்
உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேல்
கண்டங் கரியான் கருணை திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந்தானே."

---

அகழ்ந்தார்தமைத் தாங்கும்புவி அதுபோ லிடர்வோரையான்
புகழ்ந்தேபொறுத் திடுமாறுநீ புகலாய்திருத் தணிகாசலா.

## 3. பொற்பதிக் கூத்து

தற்பரசிவனுர் தமக்கு உரிய முகங்களாகிய ஈசானம் (மேல்), தற்புருஷம் (கிழக்கு), அகோரம் (தெற்கு), வாமதேவம் (வடக்கு), சத்தியோசாதம் (மேற்கு), என்ற ஐந்துடன் பேரானந்தப் பெருவெளியில் தனிநடஞ் செய்வர். இக் கூத்து 'நான்' என்னும் அகந்தையை மிதித்து அடக்கி, இடங்கொண்ட பரானந்தத்தே உயிர்களைத் தூக்கி வைத்து உயிர்களின் உள்ளுட் படிந்து நின்றியற்றுவதாம். இந்தப் பொன்னம்பலத்தாடல் கண்டவரே மெய்யடியராவர்.

"தெற்குவடக்குக் கிழக்கு மேற்கு உச்சியில்
அற்புத மானதோ ரஞ்சு முகத்திலும்
ஒப்பில் பேரின்பத் துபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே."
"அடங்காத என்னை அடக்கி வைத்து
இடங்காண் பரானந்தத் தேயென்னை யிட்டு
நடந்தான் செறிநந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான் செய்துள்ளுட் படிந்திருந்தானே."
"அடியார் பவரே அடியவராமால்
அடியார் பொன்னம் பலத் தாடல்கண்டாரே,"
"அணிப் பொற்கூத்தனை யாருரைப்பாரே?"

## 4. பொன் தில்லைக் கூத்து

இமயம், இலங்கை என்பவை இடைபிங்கலை நாடிகளாக, நடுநின்ற மேருவென்பதே சுழுமுனையாய்க் கொண்டு செலுத்தும் தில்லை வனத்துள் பரவெளியில் நாதாந்த நடம் செய்கிறுன் நாதன் என்க. அறுசமய அதிபதி என்றும் குருபரனுய் திருவம்பலத்தில் ஐம்முகச் சிவம் அறுமுகத் தவரோடு அபேதமாய் விளங்கி நின்றுடுவன். அவன் ஆடும்

---

பூவாருமிந் திரநீலமுப் போதும்புனைந் திடுநின்கழல்
ஓவாதருச் சனைசெய்துநெஞ் சுருகும்படி அருள்செய்குவாய்.

போது அங்கையிலேந்திய அனலும் ஆடும். சடையும் விரிந் தாடும். பிரானும் பித்தனுயாட, அண்ட பகிரண்டங்களும் மேலாட உண்டாம் பேரொலியுடன் நாதாந்த நடனம் இங்கு நடக்கும்.

"இடையிங் கலையிம வானே டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலைவனம் கைகொண்ட மூலம்
படர்வென்றி யென்னும் பரமாம் பரமே."

"ஆறுமுகத்தி லதிபதி நானென்றும்
கூறுசமயக் குருபரன் நானென்றும்
தேறினர் தெற்குத் திருவம்பலத்துளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்ருனே,"

"ஆதி பரனுட அங்கைக் கனலாட
ஓதும் சடையாட உன்மத்த முற்ருடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோ டாடினன் நாதாந்த நட்டமே,"

## 5. அற்புதக் கூத்து

"அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ?" எனத் திருவிசைப்பா கூறிய கூத்தர் இயற்றுவதால் இப் பெயர் ஏற்றது போலும். இக் கூத்து எண்ணில்லாத சராசரங் களில் பல்வேறு அற்புதம் நிகழ்த்துதலினுலும் இப்பேர் பொருந்துமாறு அறிக. மாயை கடந்த மாஞானிகள் காண மாதொரு பாகம் நோக்கி புருவமத்தியமாம் மன்னு சிற்றம் பலத்தே ஆதியு முடிவுமின்றி இயற்றும் அற்புதம் உடை யது. இதற்குச் சிருட்டிக் கூத்து என்ற பெயரும் உண்டு.

"தீமுதலைந்தும் திசையெட்டும் கீழ்மேலும்
ஆயு மறிவினுக்கு அப்புற மானந்த
மாயை மாமாயை கடந்து நின்ருர்காண

---

கள்ளார்கடம் பணியும்திருக் கழலும்சதங் கையும்மஞ்ஞையும்
புள்ளானகுக் குடமும்திருப் புயம்ஆறுமே துணையாகுமே.

நாயகன்நின் று நடஞ் செய்யுமாறே."

"நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்ருய்ப் பரம னிருப்பிடம்
சிற்றம்பல மென்று தேர்ந்து கொண்டேனே."

வாமையாக விளங்கும் உமையும் எம்பிரானும் சேர்ந்து நின் ற நிலையில் எழும் ஆனந்தமே ஒரு தனி நடனமாகும்.

"இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்
படங்கொடு நின்றவிப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலுந் தாமாய் நின்ருடு கின்ருரே."

இங்ஙனம் திருமூலனுர் விளங்கிய "திருக்கூத்து, ஒருவரது வாழ்நாளில் ஓடியாடும் காளைப் பருவமும் ஒழிந்து, உற்ரு ரும் மற்ருரும் மனங் கசந்து அளிக்க, மூப்பும் வந்து மரண மும் கிட்டுமுன்பே, திருச்சிற்றம்பலத்தே சென்று தரிசிக் கத் தக்கது என்று க்ஷேத்திர வெண்பா ஆசிரியர் ஐயடிகள் காடவர்கோன் கூறுகிருர்.

"ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்ருரும்
கோடுகின்ருர் மூப்பும் குறுகிற்று—நாடுகின்ற
நல்லசிற்றம் பலமே நண்ணுமுன் நல்நெஞ்சே!
தில்லைசிற்றம் பலமே சேர்."

(தொடரும்)

---

# பக்தியின் சக்தி

ஆ. கி. ரங்கராஜன்

(553-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்பரீஷனை நாடி வந்தார் முனிவர். அடிபணிந்து ஆராதித்தான் அம்பரீஷன். "சுவாமீ! தேவரீர் வருகையால்

---

கொட்டும்பறை யுடனென்கிளை கூகாஎன எமதூதுவர்
கட்டும்பிடித் திடுமென்துயர் கவராமலே எனையாளுவாய்.

சிறியேன் பாக்யசாலியானேன் என்றான். தூர்வாசர் "அம்பரீஷ! ஏகாதசி விரதத்தை நினது கிருஹத்தில் முடிக்கக் கருதியுள்ளேன்" என்றார். அரசர் அகமகிழ்ந்து "சுவாமி! பூர்வ புண்ணிய வசமாய் தேவரீரை விருந்தினராக உபசரிக்கும் பாக்யத்தைப் பெற்றேன்! அப்படியே ஆகட்டும்" என்று கூறினார்.

மறுநாள் துவாதசி. விடியற்காலையில் முனிவர் மன்னனை நோக்கி, "அம்பரீஷ? யான் நதியில் நீராடி வருகிறேன். அதுவரை பூஜையை நிறுத்தி வைக்கவேண்டும்" என்று கூறிக் கட்டளையிட்டுச் சென்றார். வெகு நேரம் ஆகியும் முனிவர் வராததால், விரதகாலம் கடந்து விடுமென அம்பரீஷன் கருதி, பூஜையை முடித்து, முனிவருக்காக தீர்த்தத்தை எடுத்து வைத்துத் தான் ஆசமனம் செய்துகொண்டான். யோகதிருஷ்டியால் அனைத்தும் உணர்ந்த தூர்வாசர், தம் திட்டம் பலித்ததென்ற சந்தோஷத்தில் அம்பரீஷனை நாடி வந்தார். நிகழ்ந்தவற்றை விபரமாய்க் கூறித் தீர்த்தத்தை அவரிடம் அளித்தார் அரசர்.

அவ்வளவுதான் தாமதம். முனிவர் தக்ஷகனைப்போல் சீறினார். "அற்பமதிகொண்ட அம்பரீஷா! இதுதான் அதிதி பூஜையா? இதுதான் பக்தியா? இதுதான் நீ அனுஷ்டிக்கும் ஏகாதசி விரதமா? உன்னை இலேசில் விடப்போவதில்லை!" எனக் கர்ஜித்தார்.

அஞ்சி நடுங்கிய அம்பரீஷன், "சுவாமி! க்ஷமிக்க வேண்டும்! அடியேன் தவறு ஒன்றும் செய்யவில்லையே! தயவுசெய்து ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பிரார்த்தித்து நின்றான்.

முனிவர், "அதெல்லாம் முடியாது. யான் தூர்வாசனென்று அறிந்தும் என்னை அவமதித்தனை. இதோ சபிக்

---

பெருவாதுசெய் சமயந்தொறும் பிதற்றும்பொருள் அறுமாறுநின் திருவாயினல் ஒரு வான்பொருள் தெளியும்படி அருள்செய்குவாய்

கிறேன்!" என அட்டகாசம் செய்தார். அம்பரீஷன் செய்வ தறியாது இறைவனைத் தியானித்தார். "கருணாகரா! ஆபத்சகாயா! அடியேன் என்ன குற்றத்தைச் செய்தேன்? பக்தர்களை ரக்ஷிப்பதால் உன்னை 'ஹரி' என்றும், துஷ்டர்களை ஒறுப்பதால் உன்னை 'ஹரன்' என்றும் அருமறைகள் புகழ்கின்றனவே! யான் உன் அடிமை யன்றோ? எனக்கு உற்ற இடரை நீ தீர்க்க லாகாதா? ஸ்ரீதரா! அச்சுதா! அகண்ட பரிபூரணா!" என்று முறையிட்டான்.

இறைவன் தொண்டர் உள்ளத்தில் ஒடுக்கம் என்பது ஆன்றோர் வாக்கு. ஆழியிடைத் துயின்றாலும் அன்பரின் உள்ளமே ஆண்டவனின் உறைவிடம். ஆகவே அன்பனாகிய அம்பரீஷனை ஆதரிக்கவும் அகந்தை கொண்ட முனிவரை அடக்கவும் கருதினன் அம்புஜநாபன்.

ஆவேசம் கொண்ட முனிவர் அம்பரீஷனை நோக்கி, "நீயும் அயோத்தியும் பஸ்மீகரமாக"...... என்றார். அதற்குள் அகில சராசரம் அனைத்தும் அதிரும் ஓசையுடன் அக்னியைக் கக்கிய வண்ணம் கருட வாஹனனின் சக்ராயுதம் தூர்வாசரை நோக்கிப் பாய்ந்தது. திடுக்கிட்ட முனிவர் அதற்குத் தப்பிவிட எண்ணி பிரம்ம லோகம் முதலிய பல இடங்களிலில் அலைந்து புகலிடம் கிடைக்காமல் லக்ஷ்மீகாந்தனைச் சரணடைந்தார். "வைகுந்த நாதா! சர்வலோக சரண்யா! அனாத ரக்ஷக! என்னைக் காப்பாற்ற வேண்டும்!" என அச்சுதனின் அடிமலரில் வீழ்ந்தார்.

நாரணன், "முனிவரே! சக்கரத்தைத் தடுக்க என்னால் முடியாது. ஏனெனில் அது என்றென்றும் பக்தர்களைக் காப்பாற்றுவதால் எனது கட்டுப்பாட்டுக்கு அடங்குவதில்லை. ஏன்? உமது தபோபலத்தினால் அடக்கி விடுவது

---

குறிகாட்டிஅந் தகனுர்உயிர் கொலைகாட்டிவந் தழையாமுனே
முறிகாட்டியே உனதாறுமா முகங்காட்டிவந் தருள்செய்குவாய்.

தானே!" என நகைத்தனன். தூர்வாசர், "பிரபோ, என்னை மன்னிக்க வேண்டும். ஆத்திரத்தில் ஆராயாது கூறிவிட்டேன்" என்று கெஞ்சினர்.

சேஷசயனன், "முனிவரே! எங்கு பிழை புரிந்திரோ அங்கேயே சென்று சரணடையும்! அன்றேல் உமக்கு அழிவு நிச்சயம்!" என்றனன். தூர்வாசர் அம்பரீஷனிடமே சென்று, "அம்பரீஷா! அபயம்! அபயம்! அகந்தை மிகுதியால் உனக்கு அநீதி இழைத்து விட்டேன். மன்னித்து விடு. சுதர்சனம் என்னைச் சம்ஹரிக்க வருகிறது! நீதான் காப்பாற்ற வேண்டும்!" என அலறினர். அம்பரீஷன் நிகழ்ந்த எல்லாவற்றையும் கண்ணுற்று, இறைவனின் கருணையையும், முனிவரின் கதியையும் கண்டு ஆனந்தம் ஒரு புறமும், அனுதாபம் ஒரு புறமும் கொண்டு இறைவனை நினைந்து, "தயாபரா! என்னைக் காப்பாற்ற நீ செய்த தந்திரம் மகத்தானது! முனிவரை மன்னிக்கும்படி பிராத்திக்கிறேன்', என வேண்டினன். சக்கரம் பேசியது: "முனிவனே! அம்பரீஷனுக்கென உன்னை மன்னிக்கிறேன்! இல்லையேல் உன்னை அழிப்பது எனக்கு ஒரு பொருட்டல்ல! பக்தியின் சக்திக்கு முன் தவ வலிமை எதிர்த்து நிற்க முடியாது என்பதை இனியேனும் உணர்ந்து நடப்பாயாக!" என்று உரைத்து மறைந்தது!

அரிதிற்கரிதாகிய மானிடப் பிறவி அடைந்த நாம் பிறவிப் பயனெய்த வேண்டுமெனில், தெய்வ வழிபாடு இன்றியமையாதது. தெய்வ வழிபாட்டுக்கு ஞானம் வைராக்யம், ஜீவகாருண்யம் முதலியவை பக்கபலமாகும். அவற்றுடன் விளங்கும் தொண்டர்களை, அன்பர்களை எத்தகைக் கொடியோராலும் எதிர்க்க முடியாது. ஆகவேதான் தாயுமானவரும் "உன் தொண்டர் பணிசெய்வதென்றோ?"

ஆ(று)அத்துவா வினையுங்கடந்(து) அந்தத் துவாதச உச்சியின்
வீ(று)அத் துவாதச கைத்தலா வேலாயுதா வேலாயுதா.

என்று தெய்வத்தை நினைந்து இரங்குகிறார். "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்கிறார் ஔவைப் பிராட்டியார். அருணகிரியார்

"பண்புடைய சிந்தை யன்பர்
தங்களி னுடன் கலந்து
பண்புபெற அஞ்சல் அஞ்சல் என வர்ராய்"

என்று வேண்டுகிறார். ஆகவே நாம் சந்ததமும் இறைவனைப் பக்தி செய்வோமாக! பக்தர்கள் வாழ்க! பக்தியின் சக்தி உயர்க!

---

சிவனடியார் 1.

# எக்காலக் கண்ணியார்

ரசபதி

பத்ராசலத்தில் பிறந்தார். நாகப்பட்டினத்தை அடைந்தார். அப்பதியை ஆளும் அரசர் ஆயினர் பத்ரகிரியார். இவர் வடமொழியில் வல்லுநர்; தென் மொழியும் தேர்ந்தார். இரண்டொரு மனைவியர் அவர்க்கு இருந்தனர். மைந்தர்ப் பேறு வாய்த்திலது; அதனால் மனம் முறிந்தது; வாழ்க்கையில் வெறுப்பு வளர்ந்தது; முத்தியில் வேட்கை முதிர்ந்தது. வீடு காட்டும் குருவை நாடினார். முடுகிப் பல காலம் முயன்றார். எல்லாரும் சுயநல மூர்த்திகள்; சுத்த மூர்த்தி கிட்டவில்லை; உள்ளம் உடைந்தது.

இவ்வுலகில் சீடர் எண்ணிறந்தோர் இருக்கின்றார்; உய்திதரும் குரு ஒருவர் கூட இல்லை. இப்படி யுரைத்து எங்கும் பறை அடியுங்கள் என்று ஆள்கட்கு அறிவித்தார். அப்படியே எங்கும் படபடத்தது பறை ஒலி.

---

பட்டிக்கட்ட மிசைஅந்தகன் பாசங்கொடு வருமுன்னமே
வட்டிக்கு வைத்திடு காசெலாம் வறியோர்க்களிப்பவர் உய்குவார்.

நகரில் ஒரு வீதி. பறை ஒலியைக் கேட்டார் அவ்வழி வந்த பட்டினத்தார்.

அடே டே! இப்படி வா! அரசர் சொன்னதைத் தப்பாக அடிக்கிறாயே! ஆயிரம் ஆயிரம் ஆசார்யர்கள் உளர்; உருப்படும் மாணவன் ஒருவன்கூட இல்லை! புறப்பட்ட இடம் சென்று, அங்கிருந்து இப்படி அடியடா பறை என்றார்.

மதிமருண்ட அவன், அப்படியே சென்று மாறியடித்தான். உப்பரிகை மேல் இருந்த வேந்தர் அவ்வோசையைக் கேட்டார்; ஓடோடி வந்தார்.

என்னடா இது? இப்படியா நான் சொன்னேன் என்றார்.

அரசே! தாங்கள் உரைத்ததை நான் உணரவில்லை என்று மாற்றிவிட்டார் ஒருசாது. என்னை மன்னிக்க என்று வேண்டினன்.

அப்படியா! பார்க்கவேண்டும் அவரை நான் என்று பதைத்த பார்த்திபர், அவனுடன் விரைந்தார். குறித்த இடத்தில் இருந்த அடிகளை அவன் சுட்டிக் காட்டினன்.

பட்டினத்தார் தேஜஸ், பார்த்திபர் மனத்தைக் கவர்ந்தது. வீழ்ந்து வணங்கிய வேந்தர், ஸ்வாமி! ஏன் அப்படி மாற்றி அடிக்கச் சொன்னீர்கள் !

உனக்கு உய்தியளிக்க நான் இருக்கின்றேனே! இல்லையென்று எப்படி நீ உரைக்கலாம்? அதற்கு உரிய பக்குவத்தை இன்னம் அடையவில்லை நீ என்று உறுத்தி உரைத்தார் அடிகளார்.

ஸ்வாமி! ஐயோ! எனக்குப் பக்குவம் என்று வரும்?

வருந்தாதே! இன்னும் ஏழு நாள்கள்தான் இருக்கின்றன. அதுவரை இவ்வூர் விட்டு அகலமாட்டேன். அந்த நாள் வரும் வரை, நியதி உணராத உன்னுடன் யான்

---

பிறித்தாருயிர் கொடுபோய்நமன் பெரிதான தண்டனைசெய்திட
மறித்தாக்கையிற் சேராமுனே மயிலேறிவந் தெதிர்நின்றிடாய்.

இருப்பது நீதியாகாது; இருந்தாலும் பிரித்துவிடும் இயற்கை; இது தேவ ரகஸ்யம். குறித்த நாள் கூடும் வரை என்னை விட்டுப் பிரிந்து இரு என்றார் அடிகளார்.

அரசர் அஞ்சி அகன்றார். ஒவ்வொரு நாளையும் ஒரு யுகமாகக் கழித்தார். ஆறும் நாள் இரவு.

பணிப் பெண் ஒருத்தி, பள்ளியறையுள் புகுந்தாள். பள்ளிக் கட்டிலில் மலர் பரப்புவது அவள் பணி. நாள் தவறாமல் இது செய்கிறோம்; இதன்மேல் படுத்தால் எப்படியிருக்கிறதென்று பார்க்கலாமா என்று பேதை, மலரணை மேல் படுத்தாள். இன்பமாகத்தான் மெத்தென இருந்தது. சிறிது நேரந்தான், ஆ! என்ன இது? மெய்ம்மறந்து உறங்குகிறாளே!

வேந்தர் படுக்கைக்கு வந்தார். கண்ணுறங்குபவளைக் கண்டார்; கடும் கோபம் கொண்டார்; கை தட்டினார்; ஓடி வந்தான் காப்பாளன்.

இவளை எழுப்பிச் சிறையில் இடு! காலையில் என் முன் கொண்டுவா என்று கட்டளையிட்டார். வேறு மலர் பரப்பச் செய்து படுத்தார்; உறங்கினார். பொழுது விடிந்தது.

கண் விழித்த காவலர் எழுந்ததும், எங்கே அவள் என்றார். காவலன் அவளைக் கொண்டு வந்தான்.

என்ன துணிவு இவட்கு! கம்பத்தில் கட்டு! புளிய மிலாறால் ஆன மட்டும் அடி என்று பிறந்தது அரசர் ஆஞ்ஞை! ஐயோ, என்ன பயங்கர தண்டனை!

பளார்! பளார்!! என்று பல அடிகள் விழுந்தன. அடி பொறுக்கமாட்டாமல் புழுவாய்த் துடித்த அணங்கு, திடீரென்று ஆவேசம் கொண்டவள்போல் ஆயினாள். ஹ ஹ ஹா ஹா ஹா என்று பேய்ச் சிரிப்புச் சிரித்தாள்.

நிறுத்து! அடிக்காதே! ஏனடி சிரிக்கிறாய்? என்று ஆத்திரத்துடன் அதட்டினார் அரசர்.

---

தொடையேறு செந்தமிழ்பாடியே தொழுதும்கோடா தவர்வாழ்தலைக் கடையேறியிங்(கு) இரவாமலே கழலார்ந்தசிற் றடிநல்குவாய்.

அரசே! மணமுள்ள மலர்கள், ஆண்டவன் அர்ச்சனைக்கு ஆகுமே! இப்படிப் படுக்கையில் இட்டு வீணுகிறதே என்று மலர் பரப்பும் காலமெல்லாம் மனம் நொந்தேன். இன்று அவைகளைப் பரப்பிய படுக்கையில், அரை நாழிகை உறங்கிய பாவத்தால் இவ்வளவு அடி வாங்கினேன். நாள் தோறும் மனையருடன் மலரணையில் உறங்கும் மன்னர்க்குத் தேவ தூதர் எத்தனை தண்டஞ் செய்வாரோ என்று எண்ணினேன்; என்னையும் அறியாமல் சிரிப்பு எழுந்தது.

பத்ரகிரியார்க்கு அதைக் கேட்டதும், அச்சம் எழுந்தது; உலகத் தொடர்பில், அதிலும் செல்வ வாழ்வில் ஆகாமியம் பெருகுவதை அறிந்தார். பளிச்சென்று உதயமாயிற்று பக்குவம். மனையரை மறந்தார். ஆட்சியைத் துறந்தார். உடுத்திய உடையை உதறினர். தொடர்ந்தவரை விறு விறுத்துத் தடியால் விரட்டினர். பட்டினத்தாரை நினைந்தார். ஆம்! அவர் சொன்னனபடி இன்று ஏழாம் நாள்! ஓடுகிறர்; ஓடிக்கொண்டே இருக்கிறர்; என்ன விரட்டியும், விரும்பி வளர்த்த நாய்மட்டும் விடாது தொடர்ந்தது.

பட்டினத்தடிகளின் பாதங்களில் வீழ்ந்தார். ஸ்வாமி! இன்று முதல் உமதடிமை அடியேன்; இகவாழ்வை வெறுத்தேன்! இந்தத் தடியும் நாயுந்தான் என்னை விட்டு ஒழிவதாயில்லை. ஏழையேன் என்னை ஏற்கவேண்டும்!

அடே அப்பா! அரச போகம் துறந்த அதுவே பிரமாதம்! வா என்னுடன் என்று ஆர்வத்துடன் அவரைப் பட்டினத்தார் அழைத்துச் சென்றர். நகரை அடுத்தொரு காடு. அதனுள்புகுந்து, பத்ரகிரி! யாரும் அணுகா இவ்விடத்தில் இரு என்று ஒரு புதருள் இருத்தி அங்கிருந்து பட்டினத்தார் அகன்றர். காலை முதல் மாலை வரை பத்ரகிரி, குருநாதர் ஆணையின்படி அசையாமல் இருந்தார்.

---

தடுத்தாட்கொளத் தகுமென்னை நீ தனியாகஇச் சகமீதிலே
விடுத்தால்பழி உனைமேவுமே வேலாயுதா வேலாயுதா.

இரவு வந்த அடிகள், பத்திரகிரியாரை எதிரிலிருந்த குளத்தில் நீராடச் செய்தார். தன் கையால் திருநீறு தரித்தார். ஐந்தக்கர உபதேசம் செய்தார். கொணர்ந்த உணவை இட்டார். அதை உவந்துண்ட பத்திரகிரியார், எஞ்சிய சோற்றை நாய்க்கும் இட்டார்.

அதன் பின் பத்திரகிரியாரை வேற்றூர்க்கு அழைத்துச் சென்ற அடிகள், குறித்த அவ்வூர் வீதியில் அவரை நிறுத்தினர்.

இவன் எல்லா வேலையும் செய்வான்; வாட்ட சாட்டமான இவனை ஒரு காசிற்கு அடகு வைக்கிறேன். பிறகு வந்து மீட்டுக்கொள்கிறேன்! யார்க்குவேண்டும் கேளுங்கள்! என்று பட படத்துக் கூவினர் பட்டினத்தார். என்ன இது?

தாசி ஒருத்தி, துணிந்து காசளித்தாள். பத்ரகிரி! இது சிவச் செயல்; இவள் இட்ட பணி செய்! சில நாளில் மீட்பேன் என்று அங்கிருந்து அடிகள் அகன்றுர்.

குருவின் கட்டளையைச் சிரமேற் கொண்ட பத்திரகிரியார், தாசி காலால் இட்ட பணியைத் தலைமேல் கொண்டு செய்தார். இடையிடை பஞ்சாட்சர உரு ஏறிய படியே இருந்தது. அதனுல் பல சித்திகள் கைவந்தன. பத்திரகிரியார் வந்த நாள் முதல், தாசி வீட்டில் செல்வம் தழைத்தது. எல்லா வேலையும் முடித்தபின், அவள் இட்ட உணவை உண்டு, எஞ்சியதை நாய்க்கு இட்டு இன்புற்றுர்.

ஒரு நாள் இரவு உண்டி கொண்டனர் அனைவரும் பத்திரகிரியார் தன் மண்கலத்தில் பரிமாறிய உணவை உண்டார்; நாயும் உண்டது. பாத்திரம் கழுவிய நீரை வீதியில் வீசினர் பத்திரகிரியார். அந்த நீர், தாசி வீட்டுத் தாய்க் கிழவி மேல் பட்டது. அவ்வளவுதான். என்ன வியப்பு! அரிய அந்நீரால் கிழவி, அழகிளங் குமரி ஆயினள்.

---

மோகம்தரு மாமாயையின் முழுகிக்கிடந் தயர்கின்றஎன்
சோகம்தவிர்த் திடுமாறுநின் துணைமாமலர்ப் பதமீகுவாய்.

வியந்த கிழவி வீறிட்டுக் கூவினள். மாடியிலிருந்து வந்த மகள், அன்னையைக் கண்டு அதிசயித்தாள். நடந்தது கூறினள் தாய். பத்திரகிரியாரை அஞ்சிப் பார்த்தாள் மகள்; எல்லாம் ஞான தேசிகன் விளையாடல் என்றார் பத்திரகிரியார். அன்று இரவு முழுதும் எவரும் உறங்க வில்லை. அதிசயம்! அற்புதம்! என்று இருந்தனர். இப்படியே இருந்து விடிந்தது பொழுது.

கன்றின் பிரிவு பொறுத தாய்போல் வந்தார் பட்டினத் தார். தாசியைக் கூவிக் காசை யளித்தார். அதுதானு! உன் பணியைஇவன் ஒழுங்காகச் செய்தானு என்றும் உசாவினர்.

ஸ்வாமி! இவர் பெரிய மகான் என்பதை நேற்றைய இரவுதான் அறிந்தோம். இவரை அடகு கொண்டதே அபசாரம்; மன்னிக்கவேண்டும் என்று வணங்கினள்; காசு வேண்டாம் என்று எவ்வளவு மறுத்தும் கேட்கவில்லை. அங்கிருந்து பத்திரகிரியை அன்புடன் அழைத்துச் சென்றார் பட்டினத்தார்.

இருவரும் திருவிடை மருதூரை யடைந்தனர். மேலக் கோபுர வாயிலில் தங்கிய அடிகள், பத்திரகிரீ! நீ கீழ்க் கோபுர வாயிலில் இரு என்றார். இன்பத்துடன் அவர் அப் படியே இருந்தார்; அங்கு இருவரும் செய்த ஆடல்கள் பல.

ஒரு நாள் நடு இரவு. நிர்வாண சாது ஒருவர், பசிக் கிறது ஐயா என்றார் பட்டினத்தாரிடம். கீழ்க்கோபுர வாயிலில் ஒரு சம்சாரி இருக்கின்றான்; அவனைக் கேளும் ஆகாரம் என்றார் அவர்.

அந்த சாது, அவ்விடம் வந்தார். பட்டினத்தார் சொன்ன சம்சாரி யார் ஐயா அது? பசிக்கிறது எனக்கு என்றார்.

சட்டியும் நாயுமா என்னை சம்சாரியாக்கின என்று உணர்ந்து நொந்தது உள்ளம். கிழவியைக் குமரியாக்கிய

மாதாபிதா குருதெய்வதம் மனைமக்களா கியசுற்றமும்
நீதானெனும் படிஎண்ணியே நினைவார்க்கருந் துணையாகுவாய்.

உயர்ந்த சட்டியை உடைத்தார். தடியால் நாயை அடித்தார். நீட்டி நிமிர்ந்து இறந்தது நாய். மூன்று சுக்கலாகத் தடியும் முறிந்தது.

விபூதிப்பை, அரையில் கோவணம்; இது இன்றைய பத்ரகிரி நிலை. பிள்ளைபோல் இருந்த நாயைக் கொன்றதை எண்ணி, இடையிடை வருந்தியது இதயம். என்னை நம்பியிருந்த அதைக் கைவிடாதே இறைவா! என்று எண்ணி நாள்தோறும் ஏத்தினர்.

> 'ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
> தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவது எக்காலம்?'
> ஓயாக் கவலையினால் உள்ளுடைந்து வாடாமல்
> மாயாப் பிறவி மயக்கறுவ தெக்காலம்?
> அற்ப சுகமறந்தே அறிவை அறிவால் அறிந்து
> கெற்பத்தில் விழ்ந்துகொண்ட கேடறுப்ப தெக்காலம்?

என்று சதா எக்காலக் கண்ணி பாடுவதும், தியானம் பண்ணுவதுமே தொழிலானுர்.

எக்காலக் கண்ணியைத் தமிழ் நாட்டில் முதல் முதல் ஆரம்பித்து உள் உருகிப் பாடிய இவர் பெயர், எக்காலக் கண்ணியார் என்று அந்நாளில் எங்கும் வழங்கி யிருந்தது. ஆண்டுகள் பல இடையில் அகன்றன.

திருவண்ணுமலையை அடுத்து மங்கலம் என்று ஒரு பதி உளது. அப்பதியில் செல்வம் சிறந்தவர் ஒரு செட்டியார். அவர்க்கு ஒரு மகள் பிறந்தாள். அழகிற் சிறந்த குணவதி அம்மகள். அத்திபூத்தது போல் பேசுவள். தனியிருந்து ஏதோ ஒன்றை ஏங்கி எண்ணுவள். காரணம் அறியாமல் பெற்ருேர் கலங்கினர். மணம் நடந்தால் எல்லாம் சரியாய் விடும் என்பது அவர்கள் எண்ணம். அதற்கு முயன்றனர்.

---

செய்தியறிந்த மகள், சிவதலங்களைச் சேவித்த பின் அது குறித்துச் சிந்திக்கலாம்; இன்றைய நிலையில் யான் எவர்க்கும் உரியவள் அல்ல என்று மணத்தை மறுத்தாள். குறிப்பறிய முடியாமல் குமைந்தது குடும்பம்.

அவள் நினைவை நிறைவேற்றப் பெற்றோர் பண்டி கட்டினர். மகளை ஏற்றினர். தொடர்ந்து பலர் நடந்தனர். பல சிவ தலங்களைச் சேவித்தனர்; திருவிடைமருதூரை அடைந்தனர். அந்த ஊர் எல்லையை அடைந்ததும், வண்டியை விட்டு மகள் குதித்தாள். கோயிலை நோக்கி ஓடினள். காரணம் அறியாமல் கலங்கிய பெற்றோர் அவளைத் தொடர்ந்து ஓடினர்.

ஆ! என்ன ஓட்டம்; அவளைப் பிடிக்கவே முடியவில்லையே! கீழக்கோபுர வாயிலையடைந்தாள்; பண்பு மிக்க பாவை, பத்ரகிரியாரைப் பணிந்தாள்.

யார் அம்மா நீ!

ஸ்வாமி! அடியேன் பூர்வாஸ்ரமத்தில் தங்கள் எச்சில் பிரசாதம் உண்ட நாய்! பூர்வ உணர்வுடன் பிறந்த நாள் தொடங்கித் தங்களை என்று காண்பதென்று இருந்தேன்! இன்றுதான் நிறைவேறியது என் எண்ணம் என்று இன்பக் கண்ணீர் சிந்தினள்; இறைஞ்சி அவர் முன் இருந்தனள்.

அவளுடைய முன் பிறப்பு உணர்வு கண்டு, மாதவர் மனம் மகிழ்ந்தது. எனினும், வேறு ஏதோ உணர்ந்தது அவர் உள்ளம். எழுந்தார்; அவள் கையைப் பற்றி இழுத்தார். மூலஸ்தானம் நோக்கி விரைந்தார். இதற்குள் தொடர்ந்து ஓடிவந்த உறவினர், இந்நிலை கண்டு, ஆ! ஆ! என்று அலறினர்.

இவர் சிவமானவர்; பொறுத்திருந்து பாருங்கள் நடப்பை என்று வீறிட்டாள் மகள். அவர்களால் ஏதே

---

ஆழ்விப்பையோ அகல்விப்பையோ அருளென்கொலோ அறியேனை
வேழ்விப்பொருப் பிடைவாசனே வேலாயுதா வேலாயுதா. [யா

னும் அபசாரம் உண்டாகுமோ என்று எண்ணியிட்ட குரல் அது.சீறினவர், அவ்வுளவில் ஆறி அடங்கினர்.

எம் பிட்சைச் சோறு உண்டவளுக்கும் பிறப்புண்டோ பித்தா! மருதேசா! என்று வீரிட்டார் பத்ரகிரியார்.

என்ன வியப்பு !முன்னாளில் வரகுண பாண்டியர் மனையாளை விழுங்கிய மகாலிங்கம், ஜோதி மயமாகி, அந்த நாயடியாளையும் இன்று தன்னுள் ஆகர்ஷித்துக் கொண்டது.

கண்ட உறவினர்க்கு ஆறுதல் கூறி நீறளித்தனர் அருந்தர். வரவர யோகமுகத்தால் பால் வண்ணரானார். சித்திரை மகத்தன்று தாமும் சிவஜோதியில் கலந்தார். நாயடியாள் பிறந்த பதி, அண்ணாமலைக்கு அண்மையில், இன்றும் நாயடியாள் மங்கலம் என்ற பெயருடன் இருக்கிறது. ஏற்றத் தாழ்வாக இருந்த விரக்தியைப் பெருக வைக்கப் பலவகையில் முயன்றார் பட்டினத்தார். முனைப்படங்கித் தவங்கிடந்து முதன்வன் அருள் பெற்ற பத்திரகிரி முனிவர் வரலாறு இது!

வாழ்க அடியார்கள் !
வளர்க இன்பம் !

# தெய்வீக சமுதாயம்

(அ. ராமமூர்த்தி)

இன்றைய சமுதாயம் எப்படி யிருக்கின்றது என்பதை எடுத்துச் சொல்ல பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஆகவே அந்த வேலைக்கு நாம் போகவேண்டாம். போக வேண்டிய அவசியமும் இல்லை. அதற்குப் பதிலாக இன்றைய சமுதாயம் எப்படி யிருக்க வேண்டும் என்று மட்டும் ஆராய்வோம்.

---

வானத்தினும் புவிமீதினும் மற்றெங்குநீ துணையென்றுகொள்
ஞானத்தினுல் உறுவேர்க்கெலாம் நவிலொன்புதில் குருவாகுவாய்

சமுதாயம் என்பது பல தனி மனிதர்களின் சேர்க்கை யாகும். பல தனி மனிதர்களின் மெய், மனப் பண்புகளே சமுதாயத்தின் பொது அமைப்பாக உள்ளது. எனவே தனி மனிதர்களின் ஒழுக்கமும் தரமுமே சமுதாயத்தின் அளவு கோல்களாகும் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

இன்றைய சமுதாயத்திலே அமைதியில்லை. உள்ளத் திலே உவகை இல்லை. திருப்தி இல்லை. வாழ்க்கையிலே நிம்மதி யில்லை.

இதற்கெல்லாம் அரசியல் காரணங்கள் காண நான் தயாராயில்லை. ஆன்மீக அடிப்படையிலே மட்டும் சிந் திக்க முற்படுவோம்.

பொருளாதாரம், சமூக அந்தஸ்து, வாழ்க்கைத் தரம் இவற்றிலே மனிதன் எவ்வளவுதான் உயர்ந்தாலுங்கூட— அவனுடைய உள்ளத்திலே திருப்தியும் உவகையும் ஏற் பட்டாலொழிய—அவன் நிம்மதியைப் பெற்று வாழ முடியாது.

மனோ நிம்மதி என்பது பணம், பதவி, புகழ் இந்த வகையராக்களால் நிரந்தரமாக ஏற்பட முடியாதல்லவா?

போதுமென்ற மனத்தைப் பெற்று விடுவதென்பது சாமானியமல்ல. முற்றும் துறந்தவனே அம் மனத்தை அடைய முடியும். தான் என்ற அகந்தையை ஒழித்த வனுக்கே உள்ளத்திலே திருப்தி ஏற்பட முடியும்.

தேவைகளைக் குறைத்துக் கொள்பவன் திருப்தி கொண்டவனல்ல. தேவைகள் அற்றவனே திருப்தியின் பொருளை உணர்ந்தவன்.

தேவைகள் அற்றவன் என்றால் வறண்ட வாழ்க் கையை நடத்துபவனென்று எண்ணி விடாதீர்கள்! தேவை

---

மதுராபுரிக் கிறைதென்னவன் மகனுகிவந் தருள்செய்திடு
விதுராதிருத் தணிகைக்குள்வாழ் வேலாயுதா வேலாயுதா.

கள் அவனுக்கு ஒரு பொருட்டல்ல என்பதுதான் அதற்கு அர்த்தம் !

வேண்டுமென்று அவன் எதையும் ஸ்வீகரிப்பதில்லை வேண்டாமென்று எதையும் அவன் திரஸ்கரிப்பதுமில்லை. தானென்ற எண்ணம் விட்டவனுக்குத் தானாகவே எல்லாம் நடக்கும்.

ஒன்றிலே பற்று ஏற்பட்டு விட்டால் எப்படியாவது அதை அடைய வேண்டுமென்று மனிதன் முயலுகிறான். அம் முயற்சியிலே தோல்வி காண நேரிட்டால், வலு வுள்ளவன் போராட்டத்திலும், பலஹீனன் மன ஏக்கத் திலும் ஆக ஆழ்ந்து விடுகிறார்கள்.

ஒரு தனி மனிதனுடைய விருப்பு வெறுப்புகள் மற் றொரு தனி மனிதனுடைய அபிலாஷைகளோடு மோதும் போது, பரஸ்பரம் காம, குரோத, லோப மோகாதிகளாகிய தீக் குணங்கள் வெளிப்படுகின்றன.

தெய்வீக வாழ்க்கையிலே தான் மனிதனுக்கு இன்பம் இருக்கிறது. காண்பன யாவும் கடவுள் மயமானால் தான், கண்கள் உண்மையைக் காண்கின்றன என்று கூறலாம். தெய்வீக சப்தமே செவிகளின் ஸ்வீகரிப்பாக இருக்க வேண்டும்.

பஞ்சேந்திரியங்களும் பரமனை உணர்வதற்காகவே உள்ளன. இதை உணர்ந்தவனே தெய்வீக மனிதன்.

இம்மாதிரியான தெய்வீக மனிதர்களால்தான் சமு தாயம் உருவாக வேண்டும். அப்பொழுது அது தெய்வீக சமுதாயமாக மாறுகிறது.

அம் மாதிரியான தெய்வீக சமுதாயத்திலேதான் திருப்தி யிருக்கும். உவகை பூக்க முடியும். சமாதானம் நிலைக்க முடியும். சாந்தி நிலவ முடியும்.

---

**வசனத்தினால் உதரத்தினால் வசனத்தின்மால் உறுகோச்சையேன் விதனத்தை நீக்கிடும் அத்தனே வேலாயுதா வேலாயுதா.**

அச் சமயத்திலே சமுதாயத்தில் போராட்டம் இருக்காது. கட்சித் தலைவர்கள் தேவையில்லை. அரசியல் இயக்கங்கள் வேண்டாம். சமாதானக் கமிட்டிகள்—நல்லெண்ணத் தூது கோஷ்டிகள் இவைகளுக்கு வேலையில்லை.

எனவே எதிர்கால சமுதாயமாவது, தெய்வீக சமுதாயமாக உருவாக வேண்டுமென்று மனப்பூர்வமாக பரமனைப் பிரார்த்திப்போமாக.

---

## "ஸ்ரீ ஜயதேவர்"

(ரா.)

ஜய தேவ ஸ்வாமிகள் கீழ் கோவிந்த மென்கிற அஷ்டபதி மஹா காவ்யத்தை இயற்றினர். அவர் கண்ணனுடைய முதல் அவதாரம். கிருஷ்ணனை பரமாத்மா ஆகவும், ராதையை ஜீவாத்மா ஆகவும், ஸகியை ஆசார்யனாகவும் வைத்து வெகு திறமையுடன் ஷை காவ்யத்தை 24 அஷ்டபதிகளாக சிறந்த ராக தாளங்களுடன் அமைத்துப் பாடியிருக்கிறார். தற்காலமும் வட நாட்டிலும், தென்னாட்டிலும் சங்கீத வித்வான்களும், பாகவதர்களும் அஷ்டபதிகளைப் பாடிவருகிறார்கள். ஆனால் அந்தந்தத் தேசப்பெரியோர்கள் வழக்கப்படி ராக, தாளங்கள் மட்டும் மாற்றிப் பாடப்படுகின்றன. சில ஊர்களில் மார்கழி மாதத்தில் தினந்தோறும் ஒவ்வொரு அஷ்டபதி பாடி, கடைசியில் ராதா கல்யாணம் உத்ஸவமாக நடத்துகிறார்கள்.

ஓரிஸ்ஸா தேசத்தில் உலகப் புகழ்பெற்று விளங்கும் பூரி ஜகந்நாதம் என்னும் புண்ணிய க்ஷேத்ரத்திற்கு சமீபத்தில், கிந்து பில்வம் என்கிற கிராமத்தில் ஸ்ரீ ஜயதேவர் பிராமண குலத்தில் அவதரித்தார். ஷை கிராமத்தில் தனி

---

கட்சிக்குள் அந்தியின் மேவியே கண்துஞ்சி வைகறையிற்செலும்
பட்சிக்குநேர் உடலோடுயிர் பலவுற்று நீங்கிடல் நல்லதோ.

மையில் ஒரு குடிசையில் இருந்துகொண்டு, ஸதா ஈஸ்வர தியானத்துடன் ஆனந்தமாய்க் காலங் கழித்து வந்தார். அக் கிராமத்தில் தேவ சர்மா என்பவருக்கு புத்திரனில்லாமல் வருந்திக் கொண்டிருந்து, ஒரு நாள் தன் மனைவியுடன் ஜகந் நாதத்தில் வீற்றிருக்கும் புருஷோத்தமன் ஸன்னதி சென்று புத்ர பாக்யம் அருளும்படிக்கும், முதல் குழந்தையைப் புருஷோத்தமனுக்கே ஆள்படுத்துகிறேனென்றும் வேண்டிக் கொண்டார்கள். பகவான் கிருபையால் அவர்களுக்கு சில காலம் கழித்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. பரம லக்ஷணங்களும், மஹாலக்ஷ்மியைப் போன்ற அழகும் வாய்ந்திருந்தது. பத்மாவதி என்று பெயரிட்டார்கள். பிறகு அவர்களுக்குச் சில ஆண் குழந்தைகள் பிறந்தனர்.

பத்மாவதி எப்பொழுதும் பகவான் குணங்களைக் கேட்பதும் பாடுவதுமாக இருந்து விவாஹ பருவத்தை அடைந்தாள். தேவ சர்மா ஏற்கனவே செய்த பிரதிக்ஞைப் பிரகாரம் பத்மாவதியை மணக் கோலத்துடன் அழைத்துக் கொண்டு புருஷோத்தமன் ஸந்நிதி வந்து, அர்ச்சகரிடம் ஏற்கனவே நடந்த விபரங்களை தெரிவித்துவிட்டு, "புருஷோத்தமா! என் பிரதிக்ஞைப்படி என் பெண் பத்மாவதியைத் தங்களுக்கே அர்ப்பணம் செய்கிறேன். ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று சொல்லி, பத்மாவதியை ஸன்நிதியில் விட்டு அந்த க்ஷேத்திரத்திலேயே தங்கி யிருந்தார்.

புருஷோத்தமன் அன்றிரவு அர்ச்சகரின் கனவில் தோன்றி, "தேவ சர்மாவால் கொடுக்கப்பட்ட பத்மாவதியை ஏற்றுக் கொண்டேன். நானே லோகோபகாரமாக அவதரித்திருக்கும் ஜய தேவருக்கு அவளை மனைவியாக் கட்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினர். இதை அர்ச்சகர் தேவ சர்மாவிடம் சொல்லி பத்மாவதியை அழைத்துக்

---

வண்ணப்பத மலர்குவாய் மயிலேறிவந் தடியேன்சொலும்
விண்ணப்பமொன் றிதுகேட்டருள் வேலாயுதா வேலாயுதா.

கொண்டு ஜய தேவரிடம் போய், பகவானுடைய ஆக்ஞையைத் தெரிவித்து, பத்மாவதியை மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். இதைக் கேட்டு ஜயதேவர் சிரித்து, இதென்ன வேடிக்கையாக இருக்கிறதென்றும், தனக்கு இப்பொழுது விவாஹத்தில் எண்ணமே இல்லை என்றும் சொல்லி விட்டார். எவ்வளவு சொல்லியும், அர்ச்சகர் கனவு உன்மைதானென்று பல தடவை தெரியப்படுத்தியும் அவர் கேட்கவே இல்லை.

(தொடரும்)

---

ஸ்ரீ வைஷ்ணப் பகுதி 1

# மங்களா சாஸநம்

(அன்பன்)

## ஜீவ யாத்திரை

பாதி யிரவில் நகர் சோதனைக்கு வந்த பாண்டியர், ஒரு வீதியில் இருந்த ஒட்டுத் திண்ணையில் உறங்கி யிருந்தவரைத் தட்டி எழுப்பி, யார் நீர் என்றார்.

மிரண்டு விழித்த அவர், நானு! யாத்ரிகன் என்றார். உமது நோக்கம் என்ன என்றார் அரசர்.

மழைக் காலத்திற்கு வேண்டியவற்றை, மற்ற மாதங்களில் தேடுவர். இரவிற்கு வேண்டியவற்றைப் பகலில் தேடிப் பயனடைவர். முதுமையில் உதவும் அவற்றை, இளமையில் முயன்று பெறுவர். அதுபோல், மறுமைக்கு வேண்டியவற்றை, இம்மையில் தேடுவதுதான் மரபு. இன்றேல், இறுதியில் பல்லிளிக்க வரும் பரிபவம். அதைத் தேடுவதுதான் இந்த யாத்திரையின் நோக்கம் என்றார் யாத்ரிகர்.

---

ஊன்றி அந்த மொழிகளை உணர்ந்த மன்னர்க்கு, உடல் வியர்த்தது. பல நாடுகளை வென்றேன்; பெரும் பொருள் திரட்டினேன்: ஸ்ரீ வல்லபதேவன் என்று பேரும் புகழும் பெற்றேன். மாபெரும் அழகியான பூசுந்தரியை மணந்தேன். இதுதான் இன்பம் என்று ஏமாந்தேன்; உடல் ஒரு நாள் வீழ்ந்து விடும்; அதன் பின் என் கதி என்ன என்று படபடத்தது மனம். உடனே யாத்ரிகரை உபசரித்து அனுப்பினர். இரவெல்லாம் உறக்கம் இல்லாமல் எண்ணுதும் எண்ணினுர். பொழுது விடிந்தது.

மறுநாள் கொலு வீற்றிருக்கிருர் கோபதி. முகத்தில் மலர்ச்சியில்லை. அரண்மனைப் புரோகிதர் செல்வநம்பி என்பவர். அவர், நரபதியிடம் மிகுந்த நட்புடையவர். முதலில் விவரம் அறியாமல் அவரும் விழித்தார். அதன் பின் வேந்தர் கருத்தை வினவி அறிந்தார்.

## அறிவிப்பார்க்கு அழைப்பு

மன்னர் பெருமா ! மறுமைக்கு வழிகாட்டும் மகான் வேண்டும்; அவ்வளவுதானே! நம் எண்ணம் நிறைவேறும்; அஞ்ச வேண்டா என்று ஆறுதல் கூறினர்.

சங்க மண்டபத்தில் ஒரு பொன் முடிப்புத் தொங்குகிறது. சாரமான சமய உண்மை உரைப்பார்க்கு, உரியது இப் பொன் முடிப்பு என்று எங்கும் பறையொலி எழுந்தது. வருக வருக பெருமக்கள் என்று எல்லா நாட்டிற்கும் அரசர் ஆணையின்படி பயனுன ஓலை பறந்தது.

## வாத முகம்

மதத்தவர் பலர் மதுரையில் திரண்டனர். அரிய உண்மை காணும் ஆர்வத்துடன், அரியணையில் அமர்ந்

---

மண்தேரைமா தரைநம்பியே மகிழேனுனைப் புகழ்வேனினி
வெண்தேரினில் வருமையனே வேலாயுதா வேலாயுதா.

திருக்கிறார் அரசர். செல்வநம்பியும் வேத வித்துக்களும் சேர்ந்திருக்கும் சபை அது. புலவர்கள் வாதத்தில் பொரிந்து தள்ளினர். ஒருவர் வாதம், சண்டப் பிரசண்டமாக இருந்தது. மற்றொருவர் சொற்பொழிவு, கோடை யிடிபோல் குமுறியது. எவரும் யுக்தி வாதத்தில் எழும்பிக் குதித்தனர்.

## நிறைந்த நிலை

பீடத்தில் இருந்து எழுந்தார் பெரியாழ்வார். பொறுமையின் பூரிப்பு, அன்பின் அணைப்பு, அடக்கம் ஒடுக்கம் அவர் தோற்றம். கவர்ச்சிகரமான அவர் திருமுகம், சபையோர் அனைவரையும் சாந்தப் படுத்தியது.

காரணப் பிரசித்த வஸ்து, ஞான வித்து, நித்திய கிருபா சமுத்திரம் என்ற ஒன்று உளது. மூல நூல்கள், அதனிடத்திலேயே எதனையும் முறையிடுகின்றன. எப்பொருளும் அப்பொருளால் உளதாகும்; நிலைபெறும்; அதனிடத்திலேயே மீட்டும் லயமடையும். தியானத்திற்குரிய அம் முதல் பொருட்கு விஷ்ணு என்று பேரிடுகிறது வேதம். நாரணன் என்றும் நவிலப் பெறும் அப்பொருளை, கண்ணனுக வழிபடுவது நலம். துதிப்பதும், உயர்ந்த அந்நாமத்தை உருவேற்றுவதும், அன்பு மிகுந்து பாடி ஆடுவதும் ஆன பக்தி மார்க்கம் ஒன்றுதான், பரமனடி காட்டும்! இங்ஙனம் என்னைப் பேச வைத்தான் பெருமான்! அவன் திருவடி கட்கே அடைக்கலம் என்ற ஆழ்வார், தியானத்தில் ஆழ்ந்தார்.

## மகிழ்ச்சி வெள்ளம்

இதே செய்தியை வேறு எவரேனும் பேசி யிருந்தால், அது வெறும் வார்த்தை யாய்விடும். வாயால் வாய்மையர்,

---

அடுத்தார்க்கெலாம் அருள்செய்பவன் அறுமாமுக னெனும்வாய்மை தொடுத்தேன்பலகவிபாடினன்துரையேயினிஎனையாள்வையே[யால்

உள்ளத்தால் உண்மையர், மெய்யால் பணி செய்த மெய்யர் ஆன இவர் வாக்கில் பிறந்த ஓவ்வொரு சொல்லும் உபதேச கீதமாகி, சபையோரை மெய்ம்மறக்கச் செய்தது. தம்பமும் பொற்கிழியைத் தாழ்ந்து கொடுத்தது. என்ன அதிசயம்!

மன்னர் துள்ளினர். ஆழ்வாரைத் தூக்கினர். இன்பக் கிளர்ச்சியுடன் யானைமேல் ஏற்றினர். மங்கலப் பறைகள் எங்கும் முழங்கின. பவனி வருகிறார் ஆழ்வார். விஷ்ணு சித்தர் வந்தார்! வேதக்கோன் வந்தார்! என்று சின்னங்கள் எங்கும் சிலிர்த்தன. வான வீதியிலிருந்து மலர் மழை பெய்தது.

## கடவுள் காட்சி

இதோ பாருங்கள்! ஒரு பொன் மலையும், அதன்மேல் ஒரு நீல மேகமுமான இரண்டும், அந்தர வழியே ஆழ்வாரை நோக்கி வருகின்றன. ஆம்! ஆம்!! பொன் மலைபோல் உளது பெரிய திருவடியின் பொலிவு; நீல முகில்போல் நிமிர்கிறது எம்பெருமான் திருமேனி. அழகின் கொஞ்சுதல், ஆற்றலின் தேற்றம், அருளின் பூரிப்பு மூன்றும், திருமகள் சமேதன் திருமேனியில் திமித மிடுகின்றன. பஞ்சாயுத கோலப் பரந்தாமனை, இமையவர் சூழ்ந்து இறைஞ்சுகின்றனர்.

## மங்களா சாஸநம்

கண் குளிரப் பகவானைக் கண்ட ஆழ்வார் உள்ளம் கசிந்தது. பக்தி வெள்ளம் கரை புரண்டது. பக்தி பாட்டாகப் பரிணமித்தது. யானையின் கழுத்திடு மணிகளைக் கண்டார்; அவைகளையே இன்பலய தாளமென்று எடுத்தார்.

**' பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு**
**பலகோடி நூறுயிரம் '**

என்று பாடுகிறார்; ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது. பாடும்

---

பொறுத்தால் குறை யுளதோமுனுள் புலையேன்செயும் பிழைநாடியே
வெறுத்தால்துணை வேறில்லையே வேலாயுதா வேலாயுதா.

இத் திருப்பல்லாண்டு, ஸ்ரீ வைஷ்ணவ மரபில் மங்களா சாஸநம் எனப் பெறும்.

எந்த ஆண்டினும் எம்பெருமானுக்கு மங்களம் உண்டாக வேண்டும் என்பது இதன் பொருள்.

வித்தக மங்களம் நமக்கு வேண்டும்; பரமனுக்கா மங்களம் பாடுவது? என்னும் கேள்வி எழுவது இயல்பு. அன்பின் பெருக்கம், ஆண்டவனுடைய சர்வ ரட்சகத்வ குணங்களை அடியொடு மறக்கச் செய்து விடும். அவனுக்கு ஒரு குறைவும் இல்லாமல் இருப்பதே நமக்கு மங்களம் என்று எண்ணுகிறது புண்ணியம் நண்ணிய புனித மனம். ஞான நெறி, அன்பு நெறி என்று இரண்டு நெறி என்றும் உண்டு.

காப்பவன் இறைவன், காக்கப்படுபவன் ஆன்மா; சிறந்த பிரணவம் கூறும் செய்தி யிது! இதனை அறிந்து இன்புறுவது ஞான நெறி.

ஆண்டவனுடைய மாபெரும் ஆற்றல்களை மறந்து காணத்தக்க அவனது கட்டழகும், இளமையின் கொழுமையுமே கண்டு, களிவளிக்கும் இத் திருமேனிக்குக் கண் திருஷ்டி படுமே! அதனால் எத் தீங்கு நேருமோ என்று அயரும் நிலை அன்பு நெறி.

இந்த இரு நெறியுள், இரண்டாவது வழியில் இருந்தவர் ஆழ்வார். அதனால்தான், வாழ்விக்கும் பரனைக் காக்கும் வழி உணர்ந்து, பல்லாண்டு பல்லாண்டு என்று பாடுகின்றார்.

சானகியை மணந்து அயோத்திக்குத் திரும்பும் சமயம், படபடத்து எதிர்த்து வந்தார் பரசுராமர். அந்நிலையில், மாபெரும் காகுத்தன் ஆற்றலை மறந்த தசரதர், 'இவனும் எனதுயிரும் உனதபயம் இனி' என்று அன்று அலறிய செய்தி, இன்றும் நம் நினைவில் இருக்கின்றது அல்லவா!

---

**நனவிற்புரிந் திடுகாரியம் நாடோறும் செய் பவராயினும்**
**கனவிற்புரிந் திடுபொய்யெனக் காணுர் உனைக் காணுர்களே.**

புனித ராமன் வனவாசம் என்று புறப்பட்ட சமயத்தில், குணக் கொண்டலான இராகவன் ஆற்றலை உணராத கோசலை, தேர்ந்து வனத்துறையும் தெய்வங்காள்! மாபெரும் உங்களால் இராமனுக்கு மங்களம் விளைவதாக என்று பிரார்த்தித்ததும் அறியோமா!

தம்மைக் காக்க வந்த தசரத மைந்தனை, தண்டகாரண்ய முனிவர்கள் மங்களா சாஸநம் பண்ணியதை மறந்ததில்லை உலகம்.

இந்த விபரீத ஞானம் வினைத் திமையால் விளைந்ததன்று; பக்திப் பிரபாவத்தால் படர்ந்தவை என்று உணர்கின்றார் முன்னோர்.

பரமபதத்திலும் இந்த விபரீதம் படர்ந்துளது.

'ஹாவு ஹாவு ஹாவு' என்று சாம வேத கோஷம் எழுந்ததாம்; அவைகளைச் செவியேற்ற (ஆதிசேடன் எனும்) திருஅனந்தாழ்வான், அசுரர் அரக்கர் எதிர்ப்பு முழக்கம் அது என்று எண்ணி, கொடும் சீற்றம் கொண்டு, குபீர் குபீர் என்று அழலை உமிழ்ந்து அதிர்த்தானும்; அநுபூதிமான்கள் இவைகளை அறிவிக்கின்றார்கள்.

'ஆங்கு ஆரவாரம் அதுகேட்டு அழலுமிழும்
பூங்கார் அரவு'

என்று திருமழிசை யாழ்வாரும் அருளொடு இதனை அறிவிக்கிறார். எனவே, பெருமானுக்கு மங்களம் பெருக விரும்புவது என்றுமுள்ள செய்தி, எங்கும் உள்ள நடை என்று தெரிகிறது அல்லவா!

வாழ்விப்பவன் எம்பெருமான் என்பது, எல்லா ஆழ்வார்களின் எண்ணம். இவர்க்கோ, பெருமான் வாழ வேண்டும்; அவனுக்கு ஒரு தீங்கும் அணுகுவது கூடாது என்பதிலேயே நாட்டம். இதனால் இவரைப் பெரியாழ்வார் என்கிறார்கள் பெரியோர்கள்.

தாகம் மிக்கவன், அது தணியும் வரை தண்ணீர் தண்ணீர் என்று தவிப்பன்; அதுபோல், பல்லாண்டு பல்லாண்டு

---

எட்டிக்கனி எனஅண்டினேர்க் கியாதவ ரெல்லருமே
விட்டிற்கிளி எனமாய்வரே வேலாயுதா வேலாயுதா.

பல்லாயிரத்தாண்டு பல கோடி நூறுயிரம் என்று பாடுகின்றுர் ஆழ்வார்.

கம்சன் ஏவிய மல்லர்களை நொறுக்கிய தோள் ஆற்றல் நினைவில் தோன்றுகிறது; அந்தப் பெருமானை எவர்தான் என்ன செய்ய முடியும்; இவ்வகையில் அச்சம் தணிவிக்கும் கனந்தங்கிய பெருந் தோள்களைக் கண்டு, ஆழ்வார்க்கு அச்சமே பெரிதும் அதிகரித்தது. பிள்ளையின் பேராற்றலை அறிந்திருக்கும் பெற்ற தாய், விளைந்தது போரெனில் இவன் வீரிட்டுப் பாய்வானே! அதன் முடிவு என்ன ஆகுமோ என்று அஞ்சுவது இயல்பு. அந்தத் தாயின் இயல்பு அமைந்தவராய், அந்த மல்லாண்ட திண்தோளுக்கும் மங்களா சாஸநம் பண்ணுகிறுர்.

அடிமைக்கு, நலம் சிறந்த திருவடியில்தான் நாட்டம். ஆதலின், சேவடி செவ்வி திருக் காப்பு என்று சேவிக்கிறுர். திருப்பல்லாண்டு எனும் பதிகம், பன்னிரண்டு பாசுரங்களையுடையது. முதலில் உள்ள இப் பாசுரம், கீர்த்தனைகளில் இருக்கும் பல்லவிபோல், ஒவ்வொரு பாசுரத்துடனும் சேர்த்துப் பாடுவது சம்பிரதாயம்.

மன்மத ஆண்டின் ஆரம்பத்தில், அப் பதிகம் கொண்டே, நாமும் மாதவன் சிறக்க என்று மங்களா சாஸநம் செய்வோமோ!

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு**
**பலகோடி நூறுயிரம்**
**மல்லாண்ட திண்தோள் மணிவண்ணு! உன்**
**சேவடி செவ்வி திருக் காப்பு**

(மல்லர்களை அடக்கியாண்ட வன்மைத் திருத்தோள்களை யுடையவனுன நீலமணி போலும் நிறத்தினனே! பல பல ஆண்டுகளிலும், பல கல்பங்களிலும், இங்ஙனமான காலமெலாம் உனது செம்மைத் திருவடிகளின் அழகிற்கு, உயர்ந்த மங்களம் உண்டாவதாக. (எ - று)

(தொடரும்)

---

தாட்கேவல்செய் திடுமாறுநீ தமியேனையாண் டருள்செய்குவாய்.
வேட்கோவனு யுலகந்தரும் வேலாயுதா வேலாயுதா.

பெரிய புராணச் சித்திர விளக்கம்: 13.

# மானக்கஞ்சாற நாயனர்

(கி. வா. ஜ.)

சோழ நாட்டில் கஞ்சாறூர் என்னும் திருத்தலத்தில் மானக்கஞ்சாறர் என்ற சிவபக்தர் வாழ்ந்து வந்தார். அவர் சோழ அரசர்களுக்குச் சேனுதிபதியாக இருப்பவர்களின் குடிப்பிறந்தவர். இறைவன் திருவருளால் நல்ல செல்வமும் வளவாழ்வும் உடையவராக வாழ்ந்தார். தாம் பெற்ற பொருளை இறைவனுடைய அடியார்களுக்கு எப்போதும் ஈந்து வழிபட்டு உவக்கும் தன்மையுடையவர் அவர்.

அவருக்கு நெடுங்காலமாக மக்கட்பேறு இல்லாமல் இருந்தது. இறைவனைத் தமக்கு மகப்பேறு வேண்டுமென்று மானக்கஞ்சாறர் வேண்டினர். அவனுடைய திருவருளால் அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. நெடுங்காலமாகத் தவஞ் செய்து இறைவன் திருவருளால் பெற்ற பெண்ணாதலின் அக் குழந்தையை மிக அருமைப் பாட்டுடன் மானக்கஞ்சாறரும் அவருடைய மனைவியாரும் வளர்த்து வந்தார்கள்.

பேதைப் பருவம் கடந்து பெதும்பைப் பருவம் அடைந்து பின்பு மங்கைப் பருவம் எய்தி அழகு பொங்க மணத்துக்குரிய செவ்வியை அடைந்து நின்முள் மானக்கஞ்சாறரின் அருமைப் புதல்வி. அப்பெண்ணின் அழகும் வளமும் அறிவும் சிறந்து விளங்குதலை யறிந்த ஏயர்கோன் கலிக்காம நாயனர், முதியவர்களை அனுப்பித் தமக்கு அப்பெண்ணை மணம் பேசும்படிச் செய்தார். அவர்கள் மானக்கஞ்சாறரிடம் வந்து தம் கருத்தைத் தெரிவித்தார்கள். அவர் அவர்கள் வாயிலாக ஏயர்கோன் கலிக்காமருடைய தகுதியை உணர்ந்தார். கலிக்காமர் சிறந்த சிவபக்தர் என்பதையும் தெரிந்து கொண்டார். ஆகவே, இவர் நம் மகளுக்கு எவ்வகையாலும் ஏற்புடைய மணவாளர் என்று

---

தொகுதாரகைக் குலமெண்ணினும் தொலையாதவெம் பிறவிக்குளே புகுதாமலுன் இருதாளெனும் புணைநல்கிஎன் றனையாண்டிடாய்.

எண்ணித் தம் மகளை மணம் செய்தளிக்க ஒப்புக் கொண்டார்.

பெரியவர்களைக் கொண்டு முகூர்த்த நாள் வைத்தார்கள். திருமணத்துக்குரியவற்றை இருசாராரும் செய்யத் தொடங்கினர். திருமண நாள் வந்தது. ஏயர்கோன் கலிக்காமரும் அவரைச் சார்ந்தவர்களும் கஞ்சாறூர் வந்து சேர்ந்தார்கள். வழக்கம் போல அன்று கஞ்சாறர் பெண்ணுக்கு வாச நீராட்டி மணத்துக்கு ஏற்ற அலங்காரங்களையெல்லாம் செய்யலானார்கள்.

அப்போது சிவபெருமான் கஞ்சாறருடைய அடியார் பக்தியை உலகுக்கு வெளிப்படுத்தத் திருவுள்ளம் கொண்டார். மகாவிரதம் பூண்ட முனிவராக நாயனருடைய மனைக்கு எழுந்தருளினர். எலும்பினாலான பல மணிகளை அவர் அணிந்திருந்தார். தலைமயிரால் அமைந்த பஞ்சவடி என்ற வடத்தையும் அணிந்திருந்தார். மகாவிரதம் என்பது சைவ பேதங்களில் ஒன்று. தலையில் சிகையும் அதில் என்பு மணியும் விளங்கின. நெற்றியில் திருநீறு ஒளிர்ந்தது.

அவ்வடியார் வருவதைக் கண்டதும் மானக்கஞ்சாறர் அவரை வரவேற்றுத் திருவடியில் விழுந்து பணிந்து எழுந்தார். "இந்தச் சமயத்தில் தேவரீர் எழுந்தருளியது அடியேனுடைய பாக்கியம்" என்று சொல்லி நின்றார். அம் முனிவர் வீட்டில் இருக்கும் அலங்காரங்கள் முதலியவற்றைக் கண்டு கேட்பவரைப் போல," இந்த வீட்டில் ஏதோ மங்கலகாரியம் நடக்கப் போகிறது போல் தோன்றுகிறது. என்ன விசேஷம்?" என்று கேட்டார். நாயனர், "என் மகளுக்குத் திருமணம் இன்று நிகழவேண்டும்" என்று கூறவே முனிவர், "அப்படியா? சோபனம் உண்டாகட்டும்!" என்று ஆசி கூறினர். நாயனர் தம் மகளை அழைத்து வந்து முனிவருடைய திருவடியில் விழுந்து வணங்கச் செய்தார்.

தம்மைப் பணிந்த பெண்ணைப் பார்த்தார் முனிவர். அவர் பார்வை அவளுடைய நெடுங் கூந்தலின் மேற்

---

சுனைபூத்தசெங் கழுநீர்மலர்த் துகள்போர்த்தசே வடிநல்கிஎன்
வினைதீர்த்திடும் தணிகாசல வேலாயுதா வேலாயுதா.

சென்றது. மானக்கஞ்சாறரைப் பார்த்து, "இவளுடைய கூந்தல் கிடைத்தால் நம்முடைய பஞ்சவடிக்கும் பயன் படும்" என்றார்.

அதைச் செவியுற்ற கஞ்சாறர் பெரும்பேறு பெற்ற வரைப் போன்ற உவகையை அடைந்தார். கையில் வாளை உருவினார். மணப்பீடத்தில் அமரப் போகும் நிலையில் இருக்கிறாள் அவள் என்பதை மறந்தார். தாம் செய்யப் போகும் செயலால் மணமகள் சீற்றம் அடைதல் கூடும் என்பதையும் எண்ணவில்லை. கணப்போதில் தம்மக ளுடை கூந்தலை அடியோடு அரிந்து முனிவர் திருக்கரத்தில் கொடுத்தார்.

அதை வாங்குவதற்குக் கை நீட்டியவராக நின்றி ருந்த பெருமான் மறைந்தருளினார். உடனே வானத்தில் விடையின்மேல் உமாதேவியுடன் எழுந்தருளித் தம் திருக் கோலத்தைக் காட்டி," உன் அன்புத் திறத்தை உலகறியச் செய்வதற்காக இப்படிச் செய்தோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

மங்கல வினைக்கு உரியவளாக நின்ற மகள் கூந்தலைக் கொய்வது அமங்கலம் என்று நினையாமல், அவளை அந்த நிலையில் மணம் புரியாமல் சினந்து மணமகன் போய்விட் டால் அவள் வாழ்வே துயர் நிரம்பியதாகிவிடும் என்பதை யும் அறியாமல், அடியார் வேண்டுவதை உடனே கொடுப் பதையே கொள்கையாகக் கொண்டிருந்த கஞ்சாறர், தம் மகளுடைய கூந்தலை அரிந்து கொடுத்தார். ஒரு குறிக் கோளை உடையவர் அதனைக் கடைப் பிடிக்கையில் என்ன தடை வந்தாலும் சலியாமல் ஒழுகினால் அவர் சிறந்த நிலையை அடைவார். மானக் கஞ்சாறருக்குத் தம்முடைய மகளின் மேல் சிறந்த அன்பு உண்டு. ஆனால் அதற்கு மேற் பட்டு நிற்பது, அடியார்களிடத்தில் அவருக்கு இருந்த பக்தி. நன்மை தீமை எது வந்தாலும் தாம் கொண்ட கொள்கையின்படி ஒழுகுபவர் பெரியோர். உலகில் யாவு ராலும் அப்படி நடக்க இயலாது. "செயற்கரிய செய்யும்"

---

படலாகுமோ மிகுதுன்பினைப் படிமீதிலிப் படியேஎனை
விடலாகுமோ தணிகைக்குள்வாழ் வேலாயுதா வேலாயுதா.

பெரியோராக இருந்தாலன்றி ஏனையவர்களால் மனத் திண்மையுடன் இருக்க முடியாது.

இறைவனுடைய திருக்காட்சி பெற்று மகிழ்ந்தார் மானக்கஞ்சாறர். குறித்த வேளையில் மணக்கோலம் பூண்டு மணமகனுராகிய கலிக்காமர் வந்தார். அங்கே நிகழ்ந்தவற்றை உணர்ந்து, இறைவன் திருவருளை எண்ணி உருகினர். கஞ்சாறர் மகளை அந்த நிலையில் திருமணம் செய்துகொண்டு இன்புற்ருர். கூத்தர் அருளால் கூந்தலும் வளர்ந்தது.

---

## மதிப்புரை

**கன்னித் தமிழ் :—** ஆசிரியர் கி. வா. ஜ. அவர்கள். கிடைக்குமிடம், அமுத நிலையம் லிமிடெட், தேனும் பேட்டை, சென்னை - 18.

தமிழிலக்கியச் சாலைமுதல் உழவர் மொழிவரை 27 கட்டுரைகளைக் கொண்ட இந்நூல், இலக்கிய ரசி கர்க்கு நல்லதொரு விருந்து. தமிழ் என்ற பெயர் வைத் தவர் யார், அகத்தியர் வளர்த்த சங்கம், கபாட புர வளம், தொல்காப்பியம் உருவான கதை, குண குணி இயல்பு, இலக்கணம், சரித்திரம், பழந் தமிழ் ஓவியம், ஓவிய வித்தகம், கலை இன்பம், கலைஞன், வாத்தியார் ஐயா, பொழுதும் போதும், அளவைச் செய்தி, ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை, புன்னையின் கதை, செவிவி கண்ட காட்சி, கம்பர் முகந்தது முதலிய பகுதிகளில் பண்டைய தெய்வ உணர்வும் இன்றைய உலகிய லறிவும் நிரம்பியுள. ஓய்வுள நேரமெலாம் ஊன்றி ஓதினல், பல செய்திகளை அறி தற்கு உதவும் நூல் இது. விலை ரூ. 2 12 0.

**ஆலைக் கரும்பு :—** ஆசிரியர் கி. வா. ஜ. அவர்கள். கிடைக்குமிடம், அமுத நிலையம் லிமிடெட், தேனும் பேட்டை, சென்னை - 18.

ஆலைக் கரும்பு முதல் புத்த ஞாயிறுவரை 19 கட் டுரைகளைக் கொண்டது இந் நூல். கருடவூர்தியனே

கடைநாளில் வந்து கா. இருளழிந்த உள்ளத்தில் கணபதி இருக்கிறார். அழுது தொழுது உருகுமவர் விழியருவி முழுகி மகிழ் அம்பிகை. அன்பொடு மீனாட்சியை ஆராதிப்பவரை அஞ்சும் அந்தகன். தடத்தமான உருவையன்றி சொருபத்தை எண்ண இயல்வதில்லை. ஆக்கையுள் இருக்கும் அறிவுச் செல்வத்தை அபகரிக்கும் திருடர் ஐவர், அண்ட லிங்கம் முதலிய பகுதிகள், நம் உள்ளத்தைத் தொடுகின்றன. பல தரம் படித்துச் சுவைக்க உருவான நூல் இது. ஆஸ்திகர் எவரிடமும் இருக்கத் தக்க நூல். விலை ரூ. 1 6 0.

# "RADHA-KRISHNA"

## GITA-GOVINDA OF SRI JAYADEVA

Devotion is a form of love. Love may be selfless. It may be selfish. As Shakespeare said the path of love never ran smooth. The path of selfishness is beset with tribulation and suffering. The ultimate end of selfish love is distress and bondage. The goal of devotion or selfless love is the ultimate emergence of man into the everlasting estasy of God experience. Gita Govinda is an exposition of the lonely journey of the soul and all its experiences in its pilgrimage from the alone to the Alone, that is, from the alone (in the diverse world) to the All-One.

It is in the realisation of the Saints of the Tamil-nad what real solitude means; what "to be alone" signifies. Alexander Selkirk is said to have exclaimed "Oh Solitude where are the charms that sages have seen in thy face". Shipwrecked on a land where there were apparently no human beings or lives in sight, the hero made a bid for the gain of spiritual charms as a compensation for the loss of the accustomed world of wealth and company. The joy of solitude does not come from the forced

or wished for exclusion of the world and all that it contains. Deprivation of relations, friends and coveted surroundings of opulence and comfort do not contribute to that loneliness which is the coveted solitude of the sages.

It is not the exclusion of the world that counts. It is the inclusion of all other selves within oneself; it is the integration of all outside with the inside, it is the realisation that the whole world is one and that there is no second soul after the first primordial universal soul. That is the true key to the proper understanding of the charms of solitude. What then may that one be that fills the worlds and integrates them as one. That is the Lord-God, the only Lord of the Universe, the Veda Purusha of the Purushasuktha; yess the Lord of Sri Radha, rather Radha's Love of the Lord; yes, Sri Krishna of the Gita Govind.

The Love of the Lord of Sri Radha and the Lord are not two different entities. Her love was Her Lord and vice versa.

The atmosphere of mind and feeling, experience and effort, devotion and realisation in which Gita Govind is set, is the atmosphere of the Universe where there is, was and will be only One Purusha—the Universal God—Sri Krishna and the innumerable maids of individual souls seeking God-assimilation. It is the assimilation of two of the greatest principles in life that is pictured in this sacred song. The submergence of the part into the whole and of the whole into the part is the true philosophic concept of Gita Govinda. Radha is the part and Govinda is the whole. The journey of the part in the love for the whole, and the absorbing grace of the whole and its loving pursuit of the part, is truly reflected in this great work.

Lord Sri Krishna is the Hound of Heaven. Sri Radha is the palpitating fabbit which endures all the anguish of separation or individualism, all its fears and hopes, in its attempt to reach the universalism of joy, the ecstacy of God-realisation.

When the individualism of the Bhaktha takes hold of the mind, the consciousness of the Lord within is lost to the feeling. The pangs of separation are beautifully pictured in terms of the lover and the beloved. Where they meet, that is where the individual separatism is dissolved in the concious realisation of the universal within, the Bhaktha and the Bhagavan are both lost, and the ecstatic joy which is the union of the jivatma and the paramatma alone remains. The intensity of God-love expresses itself in form very much alike the love of the Nayaka-Nayaki Bhavam. The yearning and the impatience, the experience of the delays in the approach of the touch of the universal spirit, takes shape in the outbursts of joy and disappointment of Sri Radha. All are Radhas, each in his or her own way. The human approach to the divinity and the coalescence of ecstatic joy have been given to the world in the understandable language and experience of the common man. Blessed are they that realise the ecstatic spirit of Sri Jayadeva in the play of hide and seek of Radha and Krishna. For, all creation is but a play of hide and seek. The Lord is in the hiding. Bhakthas are the unerring seekers, successful and blissful. "Seek the Lord in creation" is the message. Let not humanity be lost in the pursuit of the evanascent, and the unreal. This message of Sri Jayadeva has been expressed in one dynamic phrase—a name **"RADHAKRISHNA"**

—*Tiruppugal Mani*

பெரியரை இகந்த பாவமோ, அன்றிப்
பிறர்மனை நயந்தபுன் செயலோ,

குருமொழி மறுத்த குற்றமோ அறியேன்
கொடியவெங் கலியினுன் மெலிவேன்;

திருவரு ளாலென் தீவினை யகற்றிச்
செல்வமும் கல்வியும் தருவாய்

சுருள்மலி குழலி திரிபுரை பயந்த
சுந்தர விநாயக மணியே!

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஷீட்ஸ்
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1955 சித்திரை - அமிர்தவசனி)

**Coffee**
**Ours for Quality**

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS). LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

**A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,**

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd:—1924 Phone:—118

## அரிய அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. இரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளியெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |
| கணபதி பக்தர்கள் (அச்சில்) | | | |
| முருகனடியார் ,, | | | |

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1**

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St., Madras-1.